பக்கங்கள் 12 விலை சதம் 20

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 22-4-62 | ஞாயிறு | இதழ் 45

M. PONNIAH
NEWS AGENT
UDUPPIDDY.

'புதினம்' கருத்து

## அடுத்த போராட்டத்துக்கு ஆயத்தம்!

சென்ற 17—4—62 ல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா ஆகிய நான்கு முக்கிய தமிழ் நகரங்களில் தமிழரசுக்கட்சியினரின் பொதுக்கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கின்றன.

இம்மாதக் கடைசியில் கட்சியின் செயற்குழு கூடப்போகிறது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை எப்படித் தொடர்ந்து நடத்துவது என்பது பற்றி இந்தச் செயற்குழு தீர்மானிக்குமென்று தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் இலட்சியம் சமஷ்டி! சமஷ்டி கிடைக்கும் வரை கட்சியும் இருக்கும்; போராட்டங்களும் நடக்கும். ஆனால் இந்த முக்கிய குறிக்கோளுக்கான போராட்டத்தை தீவிரமாக நடத்தக்கூடியதாக இன்றைய நிலை இல்லை.

ஏனென்றால்—

கட்சியின் மாபெரும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் அத்தனை பேரும் கட்சி உறுப்பினர்களல்லர். இவர்களில் பெரும்பாலோர் வெறும் 'அபிமானி'கள் மட்டுமே!

இந்த அபிமானிகள் எதற்காகக் கட்சியை ஆதரிக்கிறார்களென்றால்—

இன்று ஒவ்வொரு தமிழ் பேசுபவனுடைய நெஞ்சையும் வேதனைப்படுத்திக்கொண்டிருக்கும் ஒரே ஒரு விஷயம் மொழிப்பிரச்சினை.

மொழிப்பிரச்சினையைத் தலையாக வைத்துத் தமிழரசார் நடாத்தும் போராட்டங்களுக்குத்தான்—வேண்டுமென்றே கட்சியை எதிர்க்கும் சிலரைத்தவிர — தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கிறது!

ஆகவே,

தமிழரசுக்கட்சி அடுத்துத் தொடங்கவிருக்கும் போராட்டம் மொழிப்பிரச்சினையை மட்டுமே முக்கியமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம். தமிழ் பேசும் ஒவ்வொருவனையும் —இடம், மதம், கட்சி என்ற வேறுபாடுகளின்றி—ஒரே அணியில் திரட்ட வல்லது இந்த மொழிப்பிரச்சினை ஒன்று மட்டுந்தான்!

சென்ற ஆண்டில் தமிழரசுக் கட்சி நடாத்திய 'அறப்போர்' தோல்வியடையவில்லை. நேரடியான பலன் கிடைக்கவில்லையே தவிர, அதைத் 'தோல்வி' என்று யாரும் கூறிவிடமுடியாது. ஆகையால் அதே விதத்திலேயோ அல்லது அந்த அனுபவங்களினால் கிடைத்த மாற்று வழிகளிலேயோ மொழிப்போராட்டத்தை ஆரம்பிக்கலாம்; ஆரம்பிக்கவேண்டும்!

"கட்சியின் உயிர் நாடி 'சமஷ்டி'. அதை எப்படித் தவிர்க்க முடியும்?" என்று கேட்கலாம்.

அதை விடும்படி யார் சொன்னார்கள்?

மொழிப் போராட்டத்தின் பின்னரும் காலம் இருக்கிறதல்லவா?



'இராசதுரை என் மகனைப் போல!'

—செல்வநாயகம்

[3-ம் பக்கம்]


- யாழ்-மாநகர சபையில் 'கடவு'ளின் சதி — பக்கம்: (2)
- இராசதுரையின் வெடிகுண்டு — (2)
- எழுத்தாளருக்கே அவமானம் ('தீ' விமர்சனம்) — (3)
- 'யாழ்ப்பாணம்—தேவன்' —சுவையான தகவல்கள் — (4)
- 20-ம் நூற்றாண்டின் அரக்கி எல்ஸி! (புதிய தொடர் அம்சம்) — (6)
- ஆபாச உடைக்காரிக்கு அப்பிள். — (9)
- பாராளுமன்றத்தில் தமிழ்க்கொலை! — (10)




'பிள்ளைக்கனியமுது' [7-ம் பக்கம்]

(சிறுகதை) "புதுமைலோலன்"

# திரை மறைவில்

## இராசதுரையின் வெடிக்குண்டு!

சென்ற 17—4—62 ல் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கூட்டத்தில் திரு, இராசதுரை பேச மறுத்ததுவிட்டதுமன்றி, "திரு. செல்வநாயகம் உட்பட மற்றும் தலைவர்கள் மத்தியில் நான் பேசவேண்டிய சில விஷயங்கள் உண்டு. அதன் பிறகுதான் எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசுவேன்'' என்று ஒரு வெடிக்குண்டும் போட்டிருக்கிறார்!

ஆனால் பலரும் நினைப்பதுபோல, யாழ்ப்பாணத்தலைவர்களுடன் அவர் கொண்டுள்ள வெறுப்புத்தான் இதன் காரணமல்ல!

கிழக்கு மாகாணத் தலைவர்களுக்கிடையே அறப்போருக்குப் பிறகு ஏற்பட்ட சில சம்பவங்களினால் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. குறித்த சில சம்பவங்களில் தமிழரசுத் தலைமைப் பீடம் திரு. இராசதுரையின் கருத்துக்கு மாறாக நடந்து கொண்டதெனவும் நம்பப்படுகிறது.

எது எப்படியிருந்தாலும் தந்தை செல்வநாயகம் இருக்கும் வரையாவது திரு. இராசதுரை கட்சிக்கு வெளியே செல்லமாட்டார் என்பதே விஷயமறிந்த வட்டாரங்களின் நம்பிக்கை. —இது சம்பந்தமாக மேற்கொண்டு அந்தரங்கமான தகவல்களை மட்டக்களப்பிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அலசியமானால் பின்னர் வெளியிடுவேன்.

## ஆசிரியர் சங்க விவகாரம்

### 'கோட்'டுக்குப் போகும்?

நல்லூர் ஆசிரியர்கள் பிரிந்து சென்று தமக்கென ஒரு கிளைச்சங்கத்தை நிறுவிக்கொண்டுள்ளார்கள் என்பதை வாசகர்கள் ஏற்கனவே அறிவார்கள். யாழ்ப்பாண ஆசிரியர் சங்கத்திலிருந்து பிரிந்த 160 அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு கிளையை நிறுவினார்கள். கையெழுத்து ஒரு சங்கத்தின் உடலேயல்லாமல் சந்தாதான் அதன் உயிர். இதை உணர்ந்த இரு கிளைகளும் இப்பொழுது சந்தா சேர்க்கும் முயற்சியில் துரிதமாக ஈடுபட்டுள்ளன. நூற்றுக்கதிகமானவர்களிடமிருந்து ஏற்கெனவே சந்தா வசூலித்துவிட்ட நல்லூர் கிளைச்சங்க உத்தியோகத்தர்கள் தமது, கிளையை அங்கீகரிக்கவேண்டுமென்று தாய்ச் சங்கத்துக்கு மனுச்செய்திருக்கிறார்கள். மனு நிராகரிக்கப்பட்டால் வேறு பெயரில் தனிச் சங்கமாகப் பதிவுசெய்து கொள்வதென்ற முடிவை நல்லூர் ஆசிரியர்கள் இப்பொழுது மாற்றிக்கொண்டுள்ளார்கள்போல் தெரிகிறது.

தாய்ச்சங்கம் நல்லூர்க்கிளையை ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் தொழிற்சங்க சட்டத்துக்கும், அ. இ. த ஆ. சங்க அமைப்பு விதிகளுக்கும் அமைய வழக்காடிப் பார்த்துவிடுவது என்ற முடிவுக்கு இவர்கள் வந்திருக்கிறார்கள் என ஒரு இரகசியச் செய்தி அடிபடுகிறது.

## செல்வாக்குக் குறையவில்லை!

'தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு இப்போது எந்த மட்டில் இருக்கிறதென்பதை இவ்வாரக் கூட்டங்கள்தான் நிர்ணயிக்கப்போகின்றன' என்று சென்றவாரம் எழுதியிருந்தேனல்லவா?

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை வவுனியா, ஆகிய நான்கு இடங்களிலும் நடைபெற்ற கூட்டங்களையும் கவனிக்கும்போது, இந்தக் கட்சிமீது தமிழ் மக்கள் வைத்திருந்த அபிமானம் இம்மியளவும் குறையவில்லையென்று நிச்சயமாகத் தெரிகிறது.

'இது முதலாவது கூட்டந்தானே, சும்மா 'விடுப்புப் பார்ப்பதற்காகவே பலர் கூட்டத்துக்கு வந்திருக்கக் கூடும்; அதைக்கொண்டு கட்சியின் செல்வாக்கு நிலையைக் கணிப்பது சரிதானா?' என்று சிலர் கேட்கலாம்,

சனக்கூட்டத்தை மட்டும் பார்த்துவிட்டு நான் இந்த அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. கூட்டங்களுக்கு வந்திருந்த பல்வேறு வகைப்பட்ட மக்களிடையே நுழைந்து அபிப்பிராயங்கள் அறிந்து எழுதியிருக்கும் எனது ஒற்று நிருபர்களின். அறிக்கைகளைக் கொண்டுதான் இதை இவ்வளவு நிச்சயமாக எழுதியுள்ளேன்.

# யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் 'கடவுள்' செய்த சதி!

## யார் அந்தக் கடவுள்?

## மேயர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் சுவையான சம்பவங்கள்

[நமது சிறப்பு நிருபர்]

இலங்கையின் பிரபல்யமான 'மா'நரகசபையாகிய எமது யாழ்ப்பாண மாநகரசபையின் 'விஷயங்கள்' யாவும் மீண்டும் நிர்வாணமாய், மக்கள்முன்வந்து நின்று 'பல் இளிப்பது'யாவருமறிந்த விஷயமே! மேயர் மீதுகொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது நடந்த சில 'ததிங்கிணதோம்'களை, நான் இங்கு உங்களுக்கு மிகவும் சுவைப்பட கூற விரும்புகிறேன்.

### தறுதலைகள் விஷயம்.

நான் கூட்டத்திற்குப் போகும் பொழுதே எனக்கு ஒரு சுவையான செய்தி கிடைத்தது. ஒரு பொலிஸ் அதிகாரியை எனக்குத் தெரியும். அவர் என்னைக் கண்டவுடன் முதல் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? "oh you are also interestedin these buggar's business?" (ஓ! நீரும் இந்தத் தறுதலைகள் விஷயத்தில் ஆர்வமுள்ளவரோ?)-எப்படியிருக்கிறது கேள்வி?

### எதற்காக மறுத்தார்

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய ஓர் அங்கத்தவர், இன்னுமோர் அங்கத்தவர்மீது குற்றத்தைச்சுமத்தி ''அது பொய்யாகில் உமது பிள்ளையைக் கொண்டு சத்தியம் பண்ணும்'' என்றார். அதற்கு குற்றம் சாட்டப்பபட்ட அங்கத்தவர் எந்தவித பதிலும் கூறவில்லை! அப்படியானால் அவர் சாட்டிய குற்றம் உண்மைதானா? பொய்யாகில் தனது பிள்ளையை கொண்டு சத்தியம்பண்ணியிருக்கலாமே!

### விளக்கு அணைந்ததா அல்லது அணைக்கப்பட்டதா?

விவாதம் உச்சநிலையை அடைத்து கொண்டிருக்கும் போது திடீரென விவாதம் நடந்து கொண்டிருந்த அறையின் விளக்கு மட்டும் அணைந்தது. பின்னர் முறையே மற்ற விளக்குகள் யாவும் அணைய நகரவிளக்குகளும் அணைந்தன! உண்மையிலேயே விளக்கு அணைந்ததா! அல்லது அணைக்கப்பட்டதா? அதுவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் 'பெரும் 'தூண்' எனக் கூறப்படுமொருவர் பேச எழும்பும் பொழுதுதானா அணையவேண்டும்? திரு. ஜேக்கப், துரையப்பாவின் ஆதரவாளர் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த உண்மைக்கும் விளக்கு அணைந்த 'விஷயத்'திற்கும் ஏதாவது தொடர்புண்டா? மின்சாரப்பகுதியில் வேலைபார்க்கும் ஓர் அதிகாரி திரு. துரையப்பாவின் ஆதரவாளர் என்பதும் உண்மையா?

முதலில் நகரசபை விளக்குகளை அணைத்து, பின்னர் யாழ்ப்பாண விளக்குகள் யாவற்றையும் அணைத்தது, நகரசபை விளக்குகளை மட்டும் அணைத்தால் எம்மில் கேள்வி வந்துவிடும் என்ற பயத்தில்தான் என்று கூறப்படுவது உண்மையா? 'பெட்ரோ மாக்ஸ்' எரிவதற்கு ஏன் 'சண்டித்தனம்' பண்ணியது? பெட்ரோமாக்சுக்கு முன்னேற்பாடாகவே 'ஏதாவது' நடந்ததா? இக்கேள்விகளுக்கெல்லாம்பதில்வந்தால் பல 'பெரும் புள்ளிகள்' கம்பிஎண்ண நேரிடுமென்பது தெரியுமா?

### யார் அந்தக் கடவுள்?

விளக்கு அணைந்தவுடன் ஓர் அங்கத்தவரின் வாய் 'கடவுள் இருக்கிறார்!' எனக்கத்தியது! அதாவதுகடவுள்தானும் விளக்கு அணைந்ததற்கு காரணமாக இருந்தவர்! நான் மீண்டும் கேட்கிறேன், விளக்கு அணைத்ததற்கு காரணமாக இருந்த அந்தக் 'கடவுள்'யார்? அவர் ஒருமனிதனா? அரசாங்கத்திற்கும் அவருக்கும் ஏதாவது தொடர்புண்டா?

ஒத்திவைக்கப்பட்ட ஷி கூட்டம் மீண்டும் 17-4-62 ல் கூடிக் குளறுபடியாக நடைபெற்றது. ஆனாலும் சில சட்டப் பிரச்சினைகள் குறுக்கிட்டதால் இக் கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது ஒத்தி ஒத்தி ஒத்தி வைப்பதன் மூலமே மேயர்பதவி நிலைத்துவிடப் போகிறதா?

கடைசியாகக் கிடைத்த ஒரு செய்தியின் படி சட்டப் பிரச்சினைமூலம் மூந்திய தீர்மானம் 'தட்டுப்பட்டு விட்டாலும்' என்ற காரணத்தினால் புதிதாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படவிருக்கிறதாம்.

## மண்ணாங்கட்டிப் புத்தகங்களா?

யாழ்ப்பாணப் பொதுநூல் நிலையத்தில் இலங்கையிலிருந்து சமீபத்தில் வெளியான சிறுகதை, கவிதைத் தொகுதிகள் வைக்கப்படவில்லையாம். இதைப்பற்றி ஒரு எழுத்தாளர் நூல்நிலையப் பொறுப்பாளரிடம் கேட்டபோது 'இலங்கையிலும் புத்தகங்கள் எழுதுகின்றார்களா? என்ன மண்ணாங்கட்டி எழுத்து!—அதுகளை ஏன்?' என்று பதில் கூறினாராம் அவர்.— இந்தச் சம்பவத்தை இன்னொரு எழுத்தாளர் சமீபத்தில் நடந்த எழுத்தாளர் சங்கமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார். மிக மோசமான செய்தி! வேதனை தரும் செய்தி! வெட்கப்படவேண்டிய செய்தி! இதைப்பற்றி சரியான விபரங்கள் சமர்ப்பிக்கும்படி ஒற்று நிருபருக்குச் சொல்லியிருக்கின்றேன். கிடைத்ததும்—எனது பேனாவின் சக்தியைப் பிறகு பாருங்களேன்!

## சிவன் தலையில் பாம்பு

வடஇலங்கை கல்விப்பகுதி அலுவலகத்துக்கு ஒரு ஆசிரியர் போனார்.

பியோன்: என்ன, எங்கே போறது?

ஆசிரியர்: அதிபரைப் பார்க்க உள்ளே போக வேணும்?

பியோன்: இங்கே வரக்கூடாதென்று தெரியாதா? வந்தால் இன்ரெடிக்' செய்யலாம், 'தெரியுமோ?

ஆசிரியர் பேசாமல் திருப்பி விட்டார்! அவர் சாதாரண ஆசிரியரல்ல' ஆசிரிய சங்கம் ஒன்றில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர். ஆனாலும் அந்தப் 'பியோன்' பாம்பு சிவன் தலையிலல்லவா இருக்கிறது? கருடன் என்ன செய்ய முடியும்!

—அம்பலத்துறைவோன்

"தீ" படித்தீர்களா?
"படித்தேன், படித்த உடனேயே புத்தகத்தை நெருப்பில் போட்டு விட்டேன், எங்கள் வீட்டில் வேறுயாரும் அதைப்படிப்பதை நான் விரும்பவில்லை!"

# தமிழ் எழுத்தாளர்களுக்கே இது அவமானம்!

"தீ" இலங்கையின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. எஸ். பொன்னுத்துரையால் சமீபத்தில் எழுதப்பட்ட 'நவீனம்'

('நவீனம்' என்றுதான் தமது முகவுரையில் திரு. பொன்னுத்துரை கூறுகிறார்.)

அவரது படைப்பைப்பற்றி விமர்சிக்குமுன் 'தீ' நவீனமா? என்ற பிரச்சனை எழுகிறது. இதை நவீனம் என்று கூறுவதைக் காட்டிலும், யாரோ ஒருவருடைய சுய சரிதையே 'தீ' என்ற நூல் என்று கூறுவதே மிகப் பொருத்தமாக இருக்கும்.

வசன ஓட்டம் ஆசிரியருக்கே தனியான சிறப்போடு துள்ளு நடைபோடுகிறது. ஆனால் அவரது 'சரிதம்' தான் ஓடாமல் மந்தகதியில் நகருகிறது. சில புத்தகங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'கைஇறக்கமுடியாது!' என்று நாம் கூறுகிறோம், அந்த வரிசையில் 'தீ' யைச் சேர்க்க முடியாது!

"கையெழுத்துப் பிரதியை திரும்ப வாசிக்கும்போது துணிச்சலான முயற்சியென்றே தோன்றுகிறது" என்று நூலின் ஆசிரியர் முன்னுரையில் கூறுகிறார்.

ஆசிரியர், தனது படைப்பு ஒரு நவீனம் என்று எண்ணியதாலேயே தனது முயற்சி துணிச்சலான முயற்சி என்று நினைக்கிறார். ஆசிரியரின் உருவக் கதாநாயகன்— அல்லது வாழ்க்கைச் சரிதைக்கு உடையவன் ஒரு நாற்றம் எடுத்த சவக்குழி. அவன் நாறிப்போன சமுதாயச் சூழலிலேயே வளருகிறான். அவனுக்கு ஏற்பட்ட சந்திப்புகளும் (துரதிர்ஷ்டவசமாக) நாறிப்போன பிண்டங்களாகவே அமைகின்றன. அத்தகையதோர் சரிதையை எழுதுவதானால் இதைவிட வேறு எப்படித்தான் எழுதுவது?

'தீ' வாழ்க்கைச் சரிதையானால், அந்தக் கதாபாத்திரத்தின் வாழ்க்கையில் நடந்தவை ஆசிரியர் குறிப்பிட்ட அவ்வளவுந்தானா? மற்றச் சம்பவங்களுக்கும் ஏன் ஆசிரியர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை?

இதை ஆசிரியரே விடுவிக்கிறார்.

"............வாழ்க்கையின் அடித்தளமும், பெரும்பகுதியுமான Sex............"

இவை ஆசிரியரின் வார்த்தைகள்.

வாழ்க்கையில் Sex க்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்திருப்பதால் மற்றைய நிகழ்ச்சிகளை அவர் அவசியமற்றதென ஒதுக்கித் தள்ளியிருக்கலாம்.

## "தீ"

## நூல் ஆராய்வு

Sex பற்றி ஆசிரியர் கொண்டுள்ள கருத்து ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. Sex ஐ ஒரு உண்மையான உழைப்பாளியின் ஸ்தானத்தில் நின்று ஆராய்ந்தால் அதுதான் வாழ்க்கை அல்ல என்பது புலனாகும். அது ஒரு ஓய்வு நேரத்து உல்லாச விளையாட்டு என்பது தெளிவாகும். காமுகர்தான், Sex தான் வாழ்க்கை; வாழ்க்கைதான் Sex, என்று எண்ணுவார்கள்.

'தீ' ஒரு இலக்கியப் படைப்பா?

ஆசிரியர் இலக்கியம் என்றுதான் கூறுகிறார்.

"............இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலியும், பிரதிபலிப்புமானால் வாழ்க்கையின் அடித்தளமும், பெரும் பகுதியுமான Sex விவகாரத்தைத் திரையிட்டு 'மரபு' என்ற வரட்டுக்கூச்சலினால் வேலி கட்டி, ஏன் நமது இலக்கிய வளர்ச்சியின் வித்தைக் கருப்பையில் வைத்தே கருச்சிதைவு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்?" —இது இலக்கியத்தைப் பற்றிய ஆசிரியரின் வியாக்கியானம்.

'மனிதன் எப்படி வாழ்கிறான்' என்பதை வர்ணிப்பதல்ல உயர்ந்த இலக்கியம். 'மனிதன் எப்படி வாழவேண்டும்.' என்பதை விளக்குவது தான் உன்னதமான இலக்கியம். இந்த வரம்புக்குள் எல்லை கட்டி நின்று ஆராயும் ஒருவன் 'தீ' யை ஒரு இலக்கியப்படைப்பு என்று ஒப்புக்கொள்ளமாட்டான்.

தந்தையும் மகளும், தனையனும் தாயும், அண்ணனும் தங்கையும் ............ இப்படியெல்லாம் அங்கொன்று இங்கொன்றாகச் சம்பவங்கள் நிகழ்வதைக் கேள்விப்படுகிறோம். இந்த மனித மாடுகளின் மயக்கத்தை 'நியதி' என்றோ, 'இயற்கை' என்றோ கூறலாமா? இவர்கள் செயலுக்குக் காரணம் காட்டும் படி இவர்களிடமே கேட்டுப்பார்த்தால் என்ன கூறுவார்கள் தெரியுமா?

'வாழ்க்கையின் அடித்தளமும், பெரும் பகுதியுமான sex விவகாரத்தைத் திரையிட்டு 'மரபு' என்ற வரட்டுக் கூச்சலினால் வேலிகட்டுவதேன்?' என்று எம்மிடமே திருப்பிக் கேட்பார்கள்.

இதற்குக் காரணம் என்ன?

நிறக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு உலகைப்பார்ப்பவன் போல், அவர்கள் தங்களை அளவு கோலாகக் கொண்டு உலகை அளக்கிறார்கள். தாம் செய்வதையே உலகில் உள்ள அத்தனை பேரும் செய்கிறார்கள், என்று இவர்கள் எண்ணுகிறார்கள். முரண்பட்ட அபிப்பிராயம் கொண்டவர்களைப் போலிகள் என்றும், புரட்டர்கள் என்றும், உள்ளதைச்சொல்லத் தைரியம் இல்லாதவர்கள் என்றும், நகையாடுகிறார்கள். அது உண்மையல்ல.

'தீ'யின் சரிதைக்கு உடையவனின் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள், உலகில் வாழும் மக்களில் 90 சத விகிதத்தினரின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்காது. ஆகவே அது இயற்கையுமல்ல; நியதியுமல்ல.

நூலின் கதாநாயகன், சீழ் பிடித்துச் சதை சதையாகப் பிய்ந்து விழும் பறங்கிப்புண்ணாக உருவாக்கப்பட்டிருக்கிறான். அவன் மூலமாக வெளிவரும் தத்துவங்களும், படிப்பவர் மனதில் அருவருப்பையே உண்டாக்குகின்றன.

'தீ'யின் மேல் உறையின் பின்புறத்தில் ஆசிரியரின் புகைப்படத்தோடுகூடிய குறிப்பு ஒன்று இருக்கிறது. அதன் கடைசி அத்தியாயத்தில்—

"மேற்கூறிய அறிமுகத்திலும் பார்க்க இவரை (ஆசிரியரை) நன்கு அறிமுகப்படுத்தக் கூடியது இந்நாவலேயாம்"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது!

ஆசிரியரை இலக்கிய சிம்மாசனத்தில் அமர்த்தும் நோக்கத்தோடு எழுதப்பட்ட இக்குறிப்பு, அவரைக் கீழே தள்ளிவிடுகிறது —சாக்கடையில்!

— "நக்கீரன்"

# "இராசதுரை எனக்கு மகன் போன்றவர்"

## மட்டக்களப்பில் தமிழரசுத்தந்தை

"இன்றைய இலங்கை அரசியல் போக்கில் தமிழினத்தின் ஏககுரலாகஒலிக்கக் கூடிய ஒரே ஒருகட்சி, தமிழரசுக் கட்சியே. தமிழ் பேசுபவர்களின்குறைகளையும் நிறைகளையும் பற்றி குரல் கொடுப்பது தமிழரசுக்கட்சி ஒன்றே. தமிழ் மக்கள் எங்கிருந்தாலும், அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்காகப்பாடுபடவேண்டிய கடமைஎங்களுடையது. எங்கள் கட்சிக்குள் எதுவித குரோதமுமில்லை. கட்சியில் பெரியவர் சிறியவர் என்றுபேதம் பார்க்க நாங்கள் முற்படுவதுமில்லை. பேதமிருந்தாலும் அவற்றைச் சுட்டிக்காட்ட உங்களுக்கு உரிமையுண்டு."

தமிழ்மக்களுக்காக அவர்களின் குறை நிறைகளுக்குக்குரல் கொடுக்கும் உரிமைஎங்களுக்குண்டு. இந்த நிலையைத் தமிழரசுக்கட்சிக்கு அளித்தவர்கள் தமிழர்கள். (தமிழ்பேசும் இனம்) கட்சியை ஆக்கவும் அழிக்கவும் கூடிய ஆயுதம் உங்களிடமுண்டு - செல்வநாயகம் பிழைவிட்டால் அதனைக் கண்டிக்கவும்-கட்சியின்றுவெளியேற்றித் தகுதியானவரைநியமிக்கவும்- கட்சியை நேரிய உயரிய பாதையில்வழிநடத்தவும்- உங்களுக்கு பூரணஉரிமை உண்டு. தமிழரசுவழியைத் தவிரவேறுவழியில்லை. எனவே ராசதுரையோ, செல்வநாயகமோதான் கட்சி என்றும், இவர்கள்தான் பெரியவர்களென்றோ சிலர் எண்ணிக் கொள்வதும் தப்பானதாகும்.

"ராசதுரைதான் கட்சியல்ல, செல்வநாயகம்தான் கட்சியல்ல, ராஜதுரை பெரியவரல்ல, செல்வநாயகமும் பெரியவரல்ல, கட்சிதான்பெரியது.

தமிழரசுக் கட்சி உங்களுடைய சொத்து. கட்சிக்கணக்காலே முன்னேற வழி கோலுவோம். ராஜதுரை பிழைவிட்டால்கண்டிக்கவேண்டியது எனது கடமை. அதற்கு எனக்கு பூரணஉரிமையுண்டு. மற்ற எவரையும் விட எனக்கு உரிமையுண்டுஏனென்றால் ராஜதுரை எனது மகனைப் போல, அவர் எனது அரசியல் சீடனுமாவார்.

இவ்வாறு மீன்பிடி மாநாட்டின் துவக்க உரையில் பேசிய தந்தை செல்வநாயகம், குழுமியிருந்த பெருந்திரளான மக்களைப் பார்த்துக் கூறினார்.

### திரு. இராஜதுரை:

எங்களுக்குள் எதுவித பேதமுமில்லை. நாங்கள் பேசுவதையெல்லாம்அப்படியே ஏற்றுக்கொள்ள, நீங்கள் கிளிப்பிள்ளைகள் அல்ல-எங்களைத்திருத்த உங்களுக்குரிமையுண்டு. விரிந்தகடலையும், பரந்தபூமியையும், பயன்படுத்தி அங்கே, மண்டிக்கிடக்கும் நமது எதிர்கால பொருளாதார வளத்திற்கான புதையலை, கிண்டிஎடுக்கமுயலவேண்டும். சென்ற காலத்தை போல-பதுக்கி வைத்துப் வேடிக்கை பார்ப்பதை மறந்துவிடவேண்டும்.

### திரு. துரைரத்தினம்

(பருத்தித்துறை M. P.)

மகாபாரதத்தில் அர்ச்சுனன் கதை எல்லோருக்கும் தெரியும். ஆட்டுக்கடாச்சண்டைபோலத்தான் நம்மிடையே பல பிரச்சனைகள் சுழல்கின்றன. இவைகளை மறந்து விட வேண்டும்.

குறைகள் இருவகை:

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் மீன்பிடி அபிவிருத்திக்கு சம்பந்தப்பட்ட இலாகா உத்தியோகஸ்தர்கள் ஒத்துழைக்காது போனால் "வேறுசமுதாயத்தைச் சேர்ந்தவனைக்கும்" என்று கூறுகிறார்கள்.


மட்டக்களப்பிலோ "மேலதிகாரிகள் யாழ்ப்பாணத்தவர்கள்" என்று குறை கூறுகிறார்கள். சொல்லிக் கொண்டே காலத்தைக் கடத்துகிறோம்.

மட்டக்களப்பில்சீவியம் கஷ்டக்குறைவானதுயாழ்ப்பாணத்திலோ சீவியம் மிகவும் கஷ்டம், இருந்தும் யாழ்ப்பாணத்தின் வாழ்க்கைத்தரம் 3 ஆண்டுகளுக்குள் 25 வீதம் உயர்ந்திருக்கிறது. இவ்வாழ்க்கைத்தர உயர்வுக்கு-யாழ்ப்பாணத்தின்கரையோரப்பகுதியே காரணம் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

## ஈழத்து எழுட்தாளரிடமிருந்து சில சுவையான தகவல்கள் :

பேட்டி: 'ரமணன்'

# 'தேவன்' யாழ்ப்பாணம்.



தாங்களேன் இப்பொழுது அதிகமாக எழுதுவதில்லை?

காரணங்கள் பல.

இரண்டு வயதில் ஒருமகன் இருக்கிறான். என் பொழுது அவனோடு கழிகிறது. அதற்குமிஞ்சித்தான் எதுவும்.

போதிய சன்மானம் யாரும் கொடுப்பதில்லை.

எழுதுவது என் இரண்டாவது தொழில்.

முதுகு சொறிந்து முன்னுக்கு வரும் கோஷ்டிகளில் நான் இல்லை.

போலிகள் எழுத்துலகில் மலிந்துவிட்டார்கள்.

ஆனல் இப்பொழுது மீண்டும் முழுமூச்சாக ஈடுபடுவதாகத் தீர்மானித்திருக்கிறேன். ஒரு குறு நாவல் முடிந்திருக்கிறது.

நீண்ட நாவல் ஒன்று அரை குறையாய் நிற்கிறது.

தங்களது தொழிலுக்கும் எழுத்துக்கும் ஏதாவது தொடர்புண்டா?

நிறைய உண்டு. 'வானவெளியிலே' என்ற நூலின் முன்னுரையில் சொல்லியிருப்பது போல புதிய விஷயங்களை என்னிடம் கேட்டறியலாம், என்று வரும் மாணவ மாணவிகள் ஏமாறக்கூடாது என்பதற்காக புதிய விஷயம் எதைப்பற்றியாயினும், ஆங்கிலத்தில் படித்ததை தமிழில் எழுதவும் கூறவும் என் ஆவல் கொஞ்சமல்ல. மேலும் அவர்களுடைய சேர்க்கையினுல்தான் மனித உள்ளத்தின் பல்வேறு கோணங்களையும், நெளிவு சுளிவுகளையும், அவதானிக்க முடிகிறது.

நீங்கள் காதல் கதைகளைத்தான் அதிகமாக விரும்புவதாகக் கேள்விப் பட்டேன். எதற்காக காதல் கதைகளை மட்டும் விரும்புகிறீர்கள்?

அப்படியல்ல. நல்ல கதைகள் எதையும் விரும்பிப் படிக்கிறேன்—காதல் கதையானுலும் சரியே. காதல்என்ருல் என்ன? புலி, சிங்கமா பயந்தோட? 'காதல் நெருப்பு' தொடக்கூடாது என்பவர்கள் விபச்சாரத்தைப் பற்றி கூச்சமின்றி எழுதுகிருர்களே, என்னநினைக்கிறீர்கள்? திருவள்ளுவருடைய காமத்துப் பாலையே ஒரு காதல் நவீனம்போல ரசித்துச் சுவைக்கிறேன். அதை மறைப்பதில்லை, மறைக்க வேண்டிய அவசியமுமில்லை. காதலின் புனிதத் தன்மையை உணராமல் வெறும் உடற் கவர்ச்சியை மட்டும் எண்ணுபவர்கள் ஓடி ஒழியலாம். நான் ஒழிப்பு மறைப்பின்றி "இது எனக்குப் பிடித்திருக்கிறது" என்கிறேன். தவரு?

தாங்கள் எழுத்துலகில் புகுவதற்குக் காரணமாக இருந்வர்கள் யார்?

கல்லூரியில் ஆசிரியர்கள் ஊக்கினுர்கள். எழுதினேன். அப்புறம் சுதர்சன் காரியாலய அதிபர் சோமசுந்தரம் துணிந்து யுத்தகாலத்தில் என் இரு நூல்களை வெளியிட்டார். அதிலிருந்து ஈழகேசரியில் அப்போதிருந்த இராஜ அரியரத்தினம், ஆனந்த விகடன் தேவன்—இப்படி எத்தனையோ பேர் தட்டிக் கொடுத்தார்கள்.

தங்களது வாழ்க்கையில் தங்களால் மறக்கமுடியாத சம்பவமெது?

எழுத்துலக வாழ்க்கையில் என்று திருத்திக் கேளுங்கள். 'வானவெளியிலே' என்றநூலை என் அம்மாவுக்கு காணிக்கையாக்கி, ஒரு நல்லூர்க் கொடியேற்றத்திலன்று முதற்பிரதியில் சமர்ப்பணப் பக்கத்தைப் பிரித்து அம்மாவிடம் நீட்டினேன். அப்பக்கத்தை அவர் படிக்கும்போது கண்ணீர் துளிர்த்தது. என் கண்களும் கலங்கின. அக்காட்சி பச்சையாய் என் மனதில் நிற்கிறது. வார்த்தைகளுக்கும் வர்ணனைக்கும் அப்பாற் பட்டது அந்த நிகழ்ச்சி.

முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிய தங்கள் கருத்தென்ன?

'லேபல்' வியாபாரம். வள்ளுவனிலிருந்து பாரதிவரை லேபலின்றி முற்போக்கு வாதிகளாயிருந்திருக்கிருர்கள். 'கம்யூனிஸ்ட் இலக்கியமே முற்போக்கு இலக்கியம்?' என்று சீனுவிலிருந்து வரும் 'இலக்கி

(11-ம் பக்கம் பார்க்க)

# கேள்வி-பதில்!

ரமணன்

எஸ். ஈ. பரம், காரைநகர்

கே:- தமிழரசு—வடக்கு கிழக்கு எம். பீக்களிடம் தகராருமே?

ப:- தமிழரசு வடக்குக்-கிழக்கு எம். பீ.க்களிடம்எவ்வித தகராறும் கிடையாது! அவ்வப்போது சில விஷயங்களில் தகராறு ஏற்படுவதும், பின்னர் சரியாகிவிடுவதும், எல்லாக்கட்சிகளுக்குள்ளும் நடக்கும் சங்கதிகள். ஆனல், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புப் பிரமுகர் ஒருவர் 'வடக்கு'க்கு மாருகப்பிரசாரம்செய்து வருகிருர்.—அவர் பேச்சு எங்கே எடுபடப்போகிறது?

செல்வி இ. மாலா,
பண்டத்தரிப்பு

கே:- நான் ஒருவரைக் காதலிக்கிறேன். அவர் கிறீஸ்தவர் நான் இந்து மதத்தவள். எமது காதல் ஈடேறுமா ரமணன்?

● தமிழரசு எம். பி. களிடம் தகராறு உண்டா? ● மாணவிகளின் முற்போக்கு ● காதலா? கல்யாணமா? ● 1961-ம் ஆண்டின் சிறந்த எழுத்தாளர்; ● அரசியல் வாதிக்கு இலக்கணம்,

ப;- 'உங்கள்காதல் ஈடேறத்தான் வேண்டுமா'? என்பதை முதலில் தீர்மானியுங்கள். காதலுக்கு மட்டுமென்ன, எந்த ஒரு நல்ல அலுவலுக்கும் 'மதம்' குறுக்கே நிற்பதை நான் எதிர்ப்பவன்!

எம். டி. ராஜசேகரம்
கொழும்பு—12

கே:- ஈழத்திலிருந்து வெளியாகும் ஓர் மாதப் பத்திரிகையின் ஆசிரியர் "......புதினம் பத்திரிகையில், இந்தியாவில் டுப் மன்னன், தமிழ்வாணன் போல் இலங்கையில் 'கப்ஸா-கிங்' என உங்களை எழுதியிருக்கிருர்கள்?" எனக் கேட்ட கேள்விக்கு, எழுதட்டும்! எழுத்து எனக்குமட்டும் சொந்தமானதல்லவே! எனப் பதில் கொடுத்திருக்கிருர் இது பற்றிய தங்கள் கருத்தென்ன?

ப:- அவரப்படி எழுதட்டுமே! எழுத்து எனக்குமட்டும் சொந்தமல்லவே!'

எஸ். ஆனந்தன்
யாழ்ப்பாணம்

கே:- ஏன், திரு. அம்பலத்துறைவோன்யூ என். பி. பத்திரிகையையும் 'டிரிபியூன். பத்திரிகையையும் காப்பியடிக்கிருர்.

ப:- 'மகாத்மா காந்தி இறந்தார்' என்ற செய்தியை முதல் முதல் வெளியிட்டது' மதருஸ் 'ஹிண்டுஸ்தான். அதன் பின்னரே உலகப் பத்திரிகைகள் யாவும் இச்செய்தியை வெளியிட்டன. அப்படியானுல் உலகப் பத்திரிகைகள் யாவும் 'ஹிண்டு'வை காப்பியடித்தன என்று கூறுவது? உண்மைச் சம்பவங்களுக்கு எவராலும் உரிமை கொண்டாட முடியாது!

செல்வி. சரஸ்வதி சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்.

கே: உங்களுக்கு அலம்பத் தெரியுமா?

ப:- இதென்னம்மா கேள்வி? அலம்பத் தெரியாதிருந்தால் நான் இக்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பேனு?

பொன்னு "கந்தகெதர"

கே:- இக்கால மாணவிகள் கையில் 'கொக்கோ—சாஸ்திரம் இருப்பது ஏன்?

ப:- அவர்கள் எல்லாம் முற்போக்குக்கொள்கை படைத்தவர்கள்.எதையும் முன்னரே அறிந்து கொள்ளவேண்டுமென்ற ஆசை!

ந. ராஜசேகரன்
யாழ்ப்பாணம்

கே:- பாடசாலைகளில் மாணவர்களை 'தேசிய சேவை' என பலவந்தப்படுத்தி வேலை வாங்குகிருர்களே கேவலம், உண்மையில்இதுபலவந்தம்தானே?

ப:- தங்களது வியாக்கியானத்தின்படி பார்த்தால், ஆசிரியர்கள் "வீட்டுக்கணக்கைச் செய்து கொண்டுவா" எனப் பலவந்தப்படுத்துவதும் பலாத்காரமல்லவா? 'தேசிய சேவையை சரியானமுறையில் கொண்டு நடாத்த, எம் நாட்டில் தகுந்த அதிகாரிகள் இல்லையே தவிர, ஒரு பொழுதும் நான் தேசிய சேவை தேவையற்றதெனக் கூறமாட்டேன்.

**பரிசுக் கேள்வி**

**திருமலைராஜ்**
415 டொக்யார்ட் வீதி
திருகோணமலை

கே:- அரசியல் வாதி என்பவன் யார்?

ப:- இன்னுமாறு மாதத்திற்குப் பின்னர் என்ன நடக்குமென ஜோஸ்யம் கூறி, பின்னரதுஏன் நடக்கவில்லையெனக் காரணம் கூறத் தெரிந்தவன் சரியான அரசியல் வாதி! என்கிருர் ஸார் வின்ஸ்டன் சேச்சில்!

தேவதீசன்—
கரவெட்டி

கே:- காதலா கல்யாணமா சிறந்தது?

ப:- 'பொலிடோலா' பொஸ்வானுவா சிறந்தது? என்ற பாணியிலிருக்கிறது தங்கள் கேள்வி! பொலிடோல் உடனடியாகக் கொல்லும். பொஸ்வானு சிறிது நேரம் கழித்துக் கொல்லும். கல்யாணத்தை பொலிடோலுக்கும் காதலை பொஸ்வானுவுக்கும் ஒப்பிடலாம்-

எம். திருச்செல்வம்
கொழும்பு-6

கே:- பெண்களுக்கு இன்பமளிக்கக் கூடிய சொல் எது?

ப:- பணம்! பணம்! பணம்!

கே:-இக்காலப் பெண்கள் எப்படிப்பட்ட கணவன்மார்களை விரும்புகிருர்கள்?

ப:- ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் இன்ஸ்சுயர் செய்யப்பட்டவனை!

கா. சுப்பிரமணியம்
முனைத்தீவு

கே:- 'இன்பம்' எனும் மகிழ்சிக்குரிய சொல்லை மனிதன் எந்தச் சந்தர்ப்பத்தில் மனமார அனுபவிக்கிருன்?

ப: எப்பொழுதாவது'சுவீப்' அடிக்கும்பொழுது!

எம். ரத்தினேஸ்வரி
கொழும்பு-6

கே:- தங்கவேலு சொர்க்கத்திற்குப் போகும்பொழுது ரேடியோவைக் கொண்டுபோகிருர். நீங்கள் சொர்க்கத்திற்குப் போகும்பொழுது எதைக் கொண்டுபோவீர்கள்?

ப:- எதைக்கொண்டுபோனுலும் இந்த ரேடியோவை மட்டும் கொண்டுபோகமாட்டேன். உங்களுக்குத் தலையிடியா? உங்க்ளுக்குத் தலையிடியா? உங்களுக்குத் தலையிடியா? என இருபத்தைந்து தரம் கேட்க 'ஓட்டோமடி'க்காகவே தலையிடி வந்துவிடுகிறதே!

எம். இந்திராணி
கொழும்பு-6

கே:- நீங்கள் ஏன் தேர்தலில் நிற்பதில்லை?

ப:- ஒருவேளை தேர்ந்தெடுத்து, என்னை பாதாளமண்டலத்திற்கு அனுப்பிவிடுவார்களோ என்ற பயத்தில்!

செ. இரெத்தினசபாபதி
தொணியகல

கே: ஈழத்து அரசியல் வாதிகளுக்கு அரசியலைப்பற்றி என்ன தெரியும்?

ப:- எது தெரியாவிட்டாலும் ஒரு சாராயப் போத்திலுடன் விஷயத்தை முடிக்கலா மென்பது மட்டும் நன்ருகத் தெரியும்!

# 'பூதந்தேவனார்' அரங்கு

## 'ம. மு.' 'ம. பி.' என்றால் தெரிகிறதா?

இலக்கிய உலகத்தில் அடிபட்டுவரும் கோஷங்கள் எத்தனை தெரியுமா? யதார்த்த இலக்கியம், ஜனநாயக யதார்த்த இலக்கியம், சோஷலிஷ்ட் யதார்த்த இலக்கியம், தேசிய இலக்கியம் இப்படி எத்தனை எத்தனையோ.........ஈழத்து இலக்கிய உலகில் இவ்வளவு அணியிலும் எழுத்தாளர்கள் இருக்கின்றனரெனப் புதுமை இலக்கிய ஏடு கண்டுபிடித்திருக்கின்றது. உண்மையைச் சொல்லப்போனால் பல எழுத்தாளர்க்கு தாம் இதில் எந்த அணியென்று தெரியவே தெரியாது எனக்குத்தெரிந்தவரையில், பழமைப் பண்டிதர்கள், அரைப்பழமை வாதிகள் அதிகம் படியாத புதுமைப் பண்டிதர்கள் வித்துவான்கள் மரபு வாதிகள், தூய்மை வாதிகள், மரபை அழித்தே திருவதென்ற முரட்டுப் பிடிவாதக்காரர்கள், வெளவால் நிலை எழுத்தாளர்கள், தொட்டாற் சுருங்கிகள், எல்லாம் செய்யத்தெரிந்த தலைக்கனப் பிரமாக்கள் இப்படி இப்படித்தான் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் அரவணைத்து எழுத்தாளர் மகாநாடு நடத்தத் தீர்மானித்திருக்கிறது முற்போக்கு எழுத்தாளர் சங்கம். ''இலக்கியம் பற்றிய எவ்வித பிரக்ஞையும், சிந்தனையும், சித்தாந்தமும் இன்றி இருந்த நிலைக்கு முற்போக்காளர் ஆரம்பித்த போராட்டம் ஒரு முற்றுப் புள்ளிவைத்து, இலக்கியத்தைப் பற்றிச் சிந்திக்கவும் கருத்துப்பரிமாறவும் உதவியுள்ளது'' எனத் தனக்குத்தானே சபாஷ்போட்டுக்கொள்கிறது. போடட்டும்: பரவாயில்லை. ஆனால் பிறர் பகுதியில் எழுதியிருப்பதுதான் எனக்கு விளங்கவில்லை. ''ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஒரு காலகட்டத்தின்முடிவாகவும், புதியதொரு காலகட்டத்தின் தொடக்கமாகவும் அவர்கள் நடாத்தும் மகாநாடு அமையுமாம்'' அப்படியானால் இனி ஈழத்து இலக்கிய வரலாறு எழுதுபவர்கள் இதை மத்திய ரேகையாக வைத்துக்கொண்டு எழுதலாம். 'ம. மு,' 'ம பி,'என்று போடலாம், விளங்கவில்லையா? மகாநாட்டுக்கு முன், மகாநாட்டுக்குப்பின் என்பதுதான் அது. கி. மு., இ. பி. என்பதைப்போல என்று வைத்துக்கொள்ளுங்களேன். சுதந்திரமாகச் சிந்தித்து சுயேச்சையாக எழுதும் எழுத்தாளர்கள் மண்பொம்மைகள் அல்ல. அவர்களை அந்தந்த இடத்திலிருந்து அசைப்பதற்கு எத்தனை மகாநாடுகள் நடத்தினாலும் முடியாது.

## தமிழ் நாட்டுடன் போர்!

புதுமை இலக்கிய ஏட்டின் தலையங்கத்திலுள்ள இன்னொரு பகுதி சிந்தனைக்குரியது. அதில் உண்மையில்லாமல் இல்லை. வரப்போகும் மகாநாடு அதற்கு ஏதாவது வழிதுறை கண்டுபிடித்தால் நல்லது. ''தமிழ் நாட்டிலிருந்து இங்கு கணக்கின்றி இறக்குமதியாகும் சஞ்சிகைகளும் வெளியீடுகளும் நமது இலக்கியத்தின் ஸ்தூலமான வளர்ச்சிக்குப் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. தென்னிந்திய புத்தக — சஞ்சிகை—வர்த்தகத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு துர் அதிஷ்டவசமான சூழ்நிலைக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது, ஈழத்தில் தரமான இலக்கிய சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவதற்கும் புத்தக வெளியீட்டு நிலையங்கள் தொடர்ந்து இயங்குவதற்கும் முடியாத - தமிழகத்து வர்த்தகப் போட்டிக்கு முன் நிலைத்து நிற்க முடியாத இந்த விபரீதமான நிலைக்கு நாம் முடிவுகட்டும் வரை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு நாம் எதையும் சாதித்துவிட முடியாது'' என்பதுதான்,விஷயம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அக்கறை உள்ள எவரும் சிந்திக்கவேண்டியதுதான். இந்த இடத்தில் அமரர் கல்கியின் எழுத்து ஞாபகம் வருகிறது. 'ஈழத்துக் கடிதம்' வரும் பக்கங்களை இலங்கை வரும் பத்திரிகைகளில் மாத்திரம் கட்டி, தமிழ் நாட்டில் வெளிவரும் பத்திரிகையில் அதனைக் கட்டாது இங்கொருபதிப்பும் அங்கொருபதிப்புமாக வெளியிட்டு வந்தது கல்கி. இங்கே இருப்பவர்கள் இதனையறியாது''ஆகா! கல்கி ஈழத்து விடயங்களுக்கு முக்கியமளிக்கிறது'' என்று எண்ணிவந்தார்கள் இதை அக்காலத்தில்ஈழகேசரி நாசூக்காகக் கண்டித்து'தமிழ் 'நாட்டுப் பத்திரிகைகளும் ஈழமும்' என்ற தலைப்பில் ஒரு கோஷத்தைக் கிளப்பியது. உடனே விழித்துக்கொண்ட கல்கியாசிரியர், "அப்படி எல்லாம் எழுதக்கூடாது. நாங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி வாசகர் கூட்டத்தைப் பெருக்கிறோம், அது ஈழத்துப் பத்திரிகைக்காரருக்குப் பின் காலத்தில் பயன்படும்'' என்று மழுப்பினார். ஏழெட்டு வருடம் சென்றும் நிலைமை மாறவில்லை. இன்றும் தமிழ் நாட்டின் பிடி இறுக்கமாகவே இருக்கிறது. சரி, அப்படியாவது போகட்டும். எங்கள் எழுத்தாளர்களில் — புலவர் பெருமக்களில் திறமைசாலிகளுக்காகவாவதுஇருட்டடிப்பு செய்யாமல் மரியாதை தாருங்கள் என்றால் அதுவும் செய்கிறார்களில்லை. கார்த்திகை மாதத்தில் எம்மை விட்டுப் பிரிந்த ஈழத்தின் தரமான எழுத்தாளர் இலங்கையர்கோனைப் பற்றிக் கலைமகள் சித்திரைமாதத்தில் நாலுவரி எழுதியிருக்கிறது. அதுவும் கலைமகள் வளர்த்த எழுத்தாளரைப் பற்றி. போதாதா, தமிழ் நாட்டுப் பத்திரிகையாளரின் மாற்றாந்தாய் மனப்பான்மையை அளவிடுவதற்கு? அதனால்தான் சிந்திக்க வேண்டிய விஷயம் என்றேன். சிந்தியுங்கள். இதற்கொரு முடிவுகட்டியே ஆகவேண்டும். அதற்கு முன் தங்கள் படைப்புகளைத்—தங்கள் பணச்செலவிலேயே—தமிழ் நாட்டில் வெளியிட்டால்தான் மதிப்பு என்ற மாயையிலிருந்து இங்குக் கூக்குரலிடுவோர் மீள வேண்டும்.

## ஆறின கஞ்சி

ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பது பழமொழி. கஞ்சியைச் சுடச் சுடக் குடித்தால்தான் ருசிக்கும். பழங்கஞ்சி ருசிக்காது. எந்த விடயமும் 'சுடச் சுட'ப் படித்தால்தான் இனிக்கும். தேசிய இலக்கியம் பற்றி கனகரத்னா எழுதிய கட்டுரையையும் எழுநூல் ஏகாம்பரம் எழுதிய கல்கிச் சிறுகதைப் போட்டி பற்றிய கட்டுரைகளையும் சென்ற மூன்று வாரமாக தென்றல் பத்திரிகை மறு பிரசுரம் செய்திருக்கிறது. கல்கிச் சிறுகதைப் போட்டி பற்றிய பிரச்சினை ஈழத்தில்மறக்கப்பட்ட ஒரு சங்கதியாகிவிட்டது. அதை மீண்டும் பிரசுரித்து தென்றல் கல்கி மேல் உள்ள கோபத்தை வெளிப்படுத்துகிறது. அதற்கு ஈழத்தை மிதிகல்லாக உபயோகிப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. ஈழத்து எழுத்தாளருக்குள்ள வெறுப்புணர்ச்சி கல்கி சிறுகதைப் போட்டியால்தான் ஏற்பட்டது என்பதும் சரியல்ல. அது சாமிநாதையர் காலத்திருந்தே தோன்றிவிட்டது. தமிழ்நாட்டிலுள்ள செல்வாக்கான பத்திரிகைகளெல்லாம் ஈழத்தை மட்டும் தட்டியே வந்திருக்கின்றன. அறிஞர்களெல்லாம் குறைவாகவே எழுதி—பேசியுள்ளார்கள். அவற்றை விபரிஷூதால் ஏடு கொள்ளாது. பழங்கஞ்சியானபடியால் ருசிக்காது.

## சுண்டைக்காயும் பனங்காயும்

'கதிரேசன்' என்ற கவிஞர் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையை அக்காலத்திய கிராம ஊழியன் பத்திரிகைக்கு அனுப்பினார். அது கிராம ஊழியனில் வெளிவந்தது. அதே பாடல் அடுத்த வாரம் ஈழகேசரியிலும் வெளிவந்தது. கிராம ஊழியனிலிருந்து எடுத்து ஈழகேசரி பிரசுரம் செய்துவிட்டு தங்கள் பத்திரிகையின் பெயரைப் போடவில்லையே எனக் கிராம ஊழியன் குறிப்பாக எழுதியிருந்தது. ஈழகேசரி அதை மறுத்து ஏதோ எழுதிவிட்டு ஒரு பக்கத்தில் திருச்சிப் பக்கத்திலிருந்து வெளிவரும் ஒரு சுண்டங்காய்ப் பத்திரிகை இப்படி எழுதியிருக்கிறது என்று கேலிசெய்தது. சிறிய பத்திரிகை என்றதற்காகவே சுண்டக்காய் என ஈழகேசரி குறிப்பிட்டது. ஆனால் கிராம ஊழியன் அதற்கு மறுப்பாக எழுதிய கட்டுரைக்கு என்ன தலையங்கமிட்டது தெரியுமா? 'பனங்காய்ப் பத்திரிகையின் ஜம்பம்' என்பதுதான். எப்படித்தாக்கினாலும் ஈழகேசரி ஆசிரியராய் இருந்த அரியரத்தினமும் கிராம ஊழியனில் இருந்த வல்லிக்கண்ணனும் இன்னும் நெருங்கிய நட்பாளராகத்தான் இருக்கிறார்கள். ○

உங்கள் துணிகள்
வெண்மையாகவும்
பிரகாசமாகவும் விளங்க
யாழ் சோப்
உபயோகியுங்கள்.
யாழ் சோப்
தரத்தில் சிறந்தது. அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பல மடங்கு லாபம் கிடைக்கிறது.
'யாழ் சோப்' பாவனையாளர்களுக்கு சிறப்புப் பரிசுகளும் கிடைக்கும். விபரங்களை எதிர்பாருங்கள்!

மலச் சிக்கலுக்கும் மூல வியாதிக்கும்
ரிஷி லேகியம்
(ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்)
தேகமெலிவு, கண்,கை, கால், திரேக எரிச்சல், பற்றுக்கள், நெஞ்சுவலி, இடுப்புவலி. வயிற்றுப்பொருமல், புளியேப்பம், பித்தவாய்வு, பசியின்மை, அசீரணம், சோம்பல். கைகால் அசதி, பௌந்திரம், உள்மூலம், வெளிமூலம், கீழ் மூலம், இரத்தமூலம், மூல முளைகள். மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.


சகல விபரங்களுமடங்கிய கேட்லாக் இனும்.
15 நாள் டின் ரூ. 3/- 30 நாள் டின் ரூ. 5-50
தபால் செலவு சதம் 85
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு - கொழும்பு

புதினம் 22-4-62

# இருபதாம் நூற்றுண்டின் அரக்கி

# 'செஞ்சூனியக்காரி, எல்ஸி!

ஜோ. ஏ எம். தாஸ்

அவள் பெயர் எல்ஸி. கட்டழகின் கண்ணுடியாக, எழிலின் ஊற்ருக, கவர்ச்சியின் கடலாக விளங்கிய அவளுக்கு மற்றெரு பெயர் 'செஞ்சூனியக்காரி' என்பது! தளதள வென்று மின்னும் பொன் மேனி கொண்ட அவள் லேசில் சிரிக்க மாட்டாள்!

ஆனல்—

சிரித்தாளோ, அந்தச் சொக்கும் சிரிப்பைக் கண்டவர்கள் சித்தம் மயங்கிச் சீரழிய வேண்டியதுதான்! அவளது அடர்ந்த—குட்டையான சுருள் கேசம் பளபளவென்று மின்னும் தாரகையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவளது காந்தக் கருவிழிகள் இரண்டும் சதா சர்வதா மயக்கும்மோகனப் பார்வையைச் சிந்திய வண்ணமேயிருக்கும். அவற்றில் ஒருவித கொடூர ஆசை மின்னும்.

இத்தனை அழகு இருந்தென்ன? ஆண் இனத்தையே துன்புறுத்தி இன்பங் கண்ட ராட்சசியாகத் திகழ்ந்தாள் அவள்!

பற்பல விதமான விசித்திர ஆசைகள் படைத்த வல்லரக்கிகளைப்பற்றி நாம் புராணங்களிலும், இதிகாசங்களிலும் படித்திருக்கிருேம்; ஆனல் நேரில் அவர்களைக் கண்டதில்லை. கட்டிளங் காளைகளைத் துன்புறுத்தி, அதனல் இன்பம் கண்டு, கடைசியில் அவர்களைக் கொன்று குவித்துத் தங்கள் பயங்கர ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வார்களாம் அந்த அரக்கிகள். அவர்கள் கண்களில் மனிதர்கள் தென்பட்டு விட்டால் போதும், அவர்களைப் பிடித்து அவர்கள் தோலை உரித்து உடுப்புகளாக அணிந்து தங்களை அலங்கரித்துக் கொள்வார்களாம். மனிதர்களின் குடல்களைப் பிடுங்கியெடுத்து மாலையாகப் போட்டுக் கொள்ளக் கூட ஆசைப் படுவார்களாம்! அப்படிப் பட்ட அரக்கிகள் ஒரு காலத்தில் நம் இலங்கையில்கூட இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

இன்று—

இவைகளைப் புராணங்களில் படிக்கும்பொழுது, 'நம்ப முடியாத வெறும் பயங்கரக் கற்பனைகள்' நாம் ஒதுக்கிவிடுகிருேம். ஆனல், அப்படியான அரக்கிகள் இந்தஉலகில் இருந்தது உண்மைதான் என்பதை மெய்ப்பிப்பதைப் போல், நெஞ்சில் கொஞ்சமேனும் இரக்கம் என்பதே இல்லாத புராணகால வல்லரக்கிகளையும் மிஞ்சிவிடக் கூடிய விதத்தில் ஒரு பெரும் அரக்கி கடந்த உலகமகா யுத்தத்தின் போது வெளித் தோன்றினுள்! அவள்தான் எல்ஸி!

கொடுங்கோலன். ஹிட்லரின் ஆட்சியில், சிறைமுகாம் ஒன்றுக்குத் தலைவனுக இருந்த கரோல் கொக் என்பவனின் மனைவி அவள். ஒரு ஜெர்மனியப் பெண்ணுன அவள், ஹிட்லரின் நாஜிக் கட்சியில் ஓர் அங்கத்தவள்.

இயற்கையில் தனக்கு மறுக்கப்பட்ட காதல் இன்பத்தைப் பூரணமாக அனுபவிக்கமுடியாத ஹிட்லர், தனது சுயநலங்கருதித் தன் கட்சியில் பெரும்பாலும் கட்டிளங் காளைகளையும், கண்கவர் பருவப் பெண்களையுமே சேர்த்துவந்தான் என்று கடந்தவாரம் எழுதியிருந்தேன் அல்லவா? கண்கொள்ளாக் கட்டளகைப் பெற்றிருந்க எல்ஸி, ஹிட்லரின் நாஜிக் கட்சியில் சேர்வதற்கு ஆட்சேபனை எங்கே இருந்திருக்கப் போகிறது? அதுவுமல்லாமல், அவள் கணவன் ஹிட்லரின் ஆட்சியில் ஓர் உயர்தர அதிகாரியாயிற்றே!

தன் கணவனின் பொறுப்பில் விடப்பட்டிருந்த சிறையில் அடைபட்டுக் கிடந்த கைதிகளைக் கொன்று, அவர்கள் உடம்பில் உள்ள பச்சை குத்திய தோலை உரித்து, அவற்றைக் கொண்டு தன் அறையில் தொங்கிக் கொண்டிருந்த மின்சார விளக்குகளுக்கு அலங்கார மூடிகள்(Shades) செய்தாளாம் அத்த அதிசயப் பெண்!

1947-ம் ஆண்டு, நியூரம்பாக் நீதிமன்றத்தில் பல நாஜிக் குற்றவாளிகள் விசாரணை செய்யப் பட்டார்கள். அப்பொழுதுதான் அறுபதுலட்சம் யூதர்களைக் கொடுமைப் படுத்திக் கொன்று குவித்த கிராதகன் அடல்ப் ஈச்மனின் தலைமையில் நடைபெற்ற அக்கிரமங்கள் பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாயின! ஆனுலும் ஈச்மன் மட்டும் அகப்படாமல் தலைமறைவாகத் திரிந்துகொண்டிருந்தான். எனினும் பல குற்றவாளிகள் கைது செய்து விசாரிக்கப் பட்டனர். அவர்களில் ஒருத்திதான் எல்ஸி

அவள் விசாரணை செய்யப் பட்ட பொழுது, பயங்கரத் தகவல்கள் பலவெளியாயின! அந்த விசாரணையின் போது தான், மனிதத் தோல்களினுல் செய்யப்பட்ட விளக்கு மூடிகள், கைஉறைகள் முதலியவற்றின் படங்கள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன! அதுமட்டுமா? அவளது சாப்பாட்டு அறையின் சுவர்களை அலங்கரிப்பதற்கென்று பாவிக்கப் பட்ட ஒரு வித விசித்திரமான பொருளும் சமர்ப்பிக்கப் பட்டது. அவை என்ன தெரியுமா? மனிதத் தலைகள் அவற்றின் இயற்கையான அளவில்நாலில் ஒரு பங்காகச் சுருங்க வைக்கப் பட்டு, சிறு சிறு சிப்பிகளைப்போல் காட்சியளித்தன. அந்தத் தலைகளைச் சுவர்களிலே பதித்து. அலங்கரித்து அழகு பார்த்தாளாம் அரக்கி எல்ஸி!

இறுதியில் அவளுக்கு ஜென்ம தண்டனை விதிக்கப்பட்டது. ஆனல் இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர், ஜெனரல் கிளே என்னும் அமெரிக்க ராணுவ கவர்னரால் எல்ஸி விடுதலை செய்யப்பட்டாள்!

அவள் விடுதலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்தன. ஜனதிபதி ட்ரூமன், இது சம்பந்தமாக ஒரு விசேஷமான புலன் விசாரணை செய்யும்படி கட்டளையிட்டார்!

ஆனல்—

"ஜெர்மனியர்களாலேயே, ஜெர்மனியர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகள் யுத்தக் குற்றங்களாகக் கருதப்பட மாட்டாது'' என்னும் சட்ட நியதியின்படி, ராணுவ கவர்ணர் ஜெனரல் கிளேயின் விடுதலை உத்தரவை ரத்து செய்யமுடியாமல் போய்விட்டது! எனவே, எல்ஸி வெற்றிப் பெருமிதத்துடன் சிறைச்சாலையிலிருந்து வெளியேறினுள்.

ஆனுலும்—

நீதியின் கண்கள் மூடிவிடவில்லை! ஜெர்மன் பொலீசார் உடனடியாக அவளைக் கைது செய்து, ஒரு ஜெர்மனிய நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். அந்த விசாரணையிலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாயின. கிராதகி எல்ஸியின் கொடுமைகளைக் கேட்டு, அகில உலகமே நடு நடுங்கியது!

1950—51-ம் ஆண்டுகளில், பவேரியா ஓக்ஸ்பர்க் நீதிமன்றத்தில் நடைபெற்ற அந்த விசாரணையின் போது, நாற்பத்தைந்து பேரைக் கொலை செய்ததாகவும்; நூற்றுமுப்பத்தெட்டுக் கொலைகளில் சம்பந்தப் பட்டிருந்ததாகவும் அவள் மீது குற்றம் சாட்டப் பட்டது!

அப்பொழுதும்—

அதிர்ஷ்டம் அவள்பக்கம் தான் இருந்தது! அந்த நாட்டில் அப்பொழுது மரணதண்டனை ஒழிக்கப்பட்டிருந்தது. எனவே அவள் ஆயுள் தண்டனையே விதிக்கப் பட்டாள்!

கட்டுடலும், காந்தக் கண்களும் கொண்ட அழகி எல்ஸி, பெண் இனத்திற்கே உரிய இரக்கமோ, அமைதியோ, மென்மைப் பண்புகளோ இல்லாத விதத்தில், பெண்மையையே இழந்து விட்ட பாதகியாக உருமாறியதுஏதனல்? அதன் காரணங்கள்தான் என்ன?

அதுதான்—

வறுமை!

"எனது துன்பங்களில் முதல் துன்பம், நான் இவ்வுலகில் பிறந்ததுதான்'' என்ருர் ரூஸோ. பிறந்த நாள் முதல் எல்ஸியும் அளவற்ற வறுமைத் துன்பத்தை அனுபவித்து வந்தாள்! "கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை......'' என்று கூறினர் ஔவைப் பிராட்டி குழந்தைப் பிராயம் முதல், குமரியாகும்வரை அவளைச் சூழ்ந்து கொண்டிருந்த வறுமையின் கோரப் பிடியிலிருந்து தப்பிவிட வேண்டும் என்ற ஆத்திரம்; இதுவரையில் யாருமே அடைந்து அனுபவிக்காத ஆடை அணிகளையும், விநோதப் பொருட்களையும், அடைந்து அனுபவிக்க வேண்டும் என்ற விசித்திர வேட்கை; அளவுகடந்த ஆசைக் கனவுகள்; அடக்கவேமுடியாத மோகதாபங்கள்; அத்தனை ஆடவர்களும் தன் அழகையும், இளமையையும் கண்டு மயங்கிவிடவேண்டும் என்ற ஒருவித ஆசை இவைகள்தான் அழகி எல்ஸியை அரக்கியாக உருமாற்றியதற்குக் காரணங்கள்! இவைமட்டுமல்ல, மற்றெரு காரணமும் உண்டு!.

யுத்த வெறி பிடித்து அலைந்த ஹிட்லரின் வாலிப இயக்கத்தையும், அதன் முறைகேடான போதனைகளையும்பின்பற்றியதனல் உண்டான உணர்ச்சியும் அவளது மாற்றத்திற்கு ஒரு முக்கிய காரணம்!

பெண்தன்மையையே காற்றில் பறக்கவிட்டு, பித்தம்பிடித்த பேயாக உரு மாறிய பாதகி எல்ஸியின் வரலாறு தான் என்ன?

அது—

ஒரு சுவையான கதை!

(தொடரும்)

மங்கையர் அணியும்
தங்க
நகைகள்
★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்
பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

❊ மின்னும் வைரங்களுக்கும் ❊ உயரிய நகைகளுக்கும்
தங்கப் பவுண்
நகை மாளிகை
போன்: 85
கே. என். மீருன் சாஹிப்
கன்ணதிட்டி,
யாழ்ப்பாணம்.

குழந்தை இல்லாக் குறை அவளைப் பாடாய்ப் படுத்தியது. 'மொட்டை மரம்' என்ற பெயரோடு எத்தனை நாள்தான் வாழமுடியும் என்று ஏங்கினாள். கடைசியில் அவள் தாய்மை பெற்றாள். ஆனால் உள்ளத்து மகிழ்சிதான் செத்து விட்டது. ஏன்?

# பிள்ளைக்கனியமுது

சூரியன் மேலைக் கடலில் வீழ்ந்து, இருட் போர்வையால் தன்னை மறைக்கும் நேரம். பகல் முழுதும் உழைத்து மக்கள் ஓய்வு நோக்கி வீடு வந்து கொண்டிருந்தார்கள்.

அது ஒரு சிறிய வீடு. அவ்வீட்டின் விருந்தையில் உள்ள ஓர் தூணுடன் தூணை நின்று......கன்னம் வழியே ஆறு ஓட வாய்க்கால் கட்டி.........உள்ளத்தில் புயல் வீசும் எண்ணத்திடையில் சிக்க விட்டு.........என் ஆசை எப்போது தீருவது எனவினா எழுப்பி விடைகிடையாத நிலையில் அவள்......நிராசையால், துடித்தபடி நின்று கொண்டிருக்கிறாள்.

'டிங் டிங்' என மணிக்கூடு ஏழுமுறை அடித்து ஓய்ந்து விட்டது. சேலைத்தலைப் பால் கண்ணைத் துடைத்து, கிணற்றை நாடி முகத்தைக் கழுவி, பவுடரால் முகத்தின் சோகத்தை மறைக்க முயன்று, திரும்பவும் விருந்தைக்குவர, சப்பாத்தொலி முன்வர, கனகராஜன் விருந்தைப்படியில் ஏறினான்.

அவன் கையிலிருந்த பாக்கை வாங்கினாள். கோட்டை கழற்றி விட்டாள். சுடச்சுடதேநீர் தயாரித்து வந்து கொடுத்தாள்.

கனகராஜன் அன்று வாங்கி வந்திருந்த சஞ்சிகையை எடுத்த அவள், அதன் அட்டைப் படத்தைப் பார்த்தபடி .........பழைய சோகம் வதனமேகத்தில் கப்ப... சின்னஞ்சிறு கால்கள், முத்துப்பல் காட்டும் பால் வண்ணச் சிரிப்பு, ஆகா! எழில் தவழும் குழந்தை—அவ்வட்டைப்படமாகியிருந்தது.

அந்த அட்டைப் படம், உயிர்பெற்று, உணர்ச்சிபெற்று, பிஞ்சுக்கால்களையாட்டி, வாயிலே நீர் ஒழுக, 'அம்மா ஆ' என அழைத்தான்.........அவள் முகத்தில் ஒரு கணம் களிப்பின் எல்லை—அக்குழந்தையை இருகரங்களாலும் தூக்கினாள், அணைத்தாள், மார்போடு இறுக்கிச் சேர்த்தாள்... என்ன......சஞ்சிகையைக் கிழித்து எறிந்தாள், விக்கல் சேரத் தன்னை மறந்து அழுதாள்......!

நேரெதிரே உட்கார்ந்திருந்தஅவளின் கணவன் கனகராஜனின் இதயம், விலாக் கூட்டை விட்டு வெளிவந்து விடக்கூடிய அளவு துடித்தது, புரண்டது,—தலைகுனிந்தான்; அவன் கன்னத்திலேயும் கண்ணீர், ஆனால் படீரெனக்கண்ணீரைத் துடைத்து விட்டபடி,—;

"இன்று புதுப்படமாம், போவோமா இராதா?" எனக் கூறினான்.

இராதாவும் தன் உள்ளத்து ஆசையில் வெறியாட்டமாடிக் கிடந்த உலகை விட்டு, இவ்வுலகுக்கு வந்தாள். அவசர அவசரமாகக் கண்ணைத் துடைத்தாள். ஐயையோ! 'அவரையும் மனம் நோகச் செய்துவிட்டேன்' என எண்ணியபடி சிரித்தாள். வலிந்து இழுத்த சிரிப்பு!—

அவர்கள் காதலித்து மணந்தவர்கள். ஒருவரில் ஒருவர் வாழ்பவர்கள். மகிழ்வாக வாழக்கூடிய வசதியுண்டு. மாதம் இரு நூறு ரூபா வருமானம் கொண்ட உத்தியோகம் கனகராஜனுக்குண்டு. விட்டுக் கொடுத்து குடும்பம் அமைதியுடனும் வாழக்கூடிய மனம் நிறைய உண்டு ஆனால்.........!

மணம் முடித்த எந்தப் பெண்ணும் விரும்பும் பூரணத்துவ வாழ்வு; தம் பெயர் ஓர் இரத்தப்படைப்பு—அந்தச் சின்னஞ்சிறு பிள்ளைக்கனியமுது, இல்லாக்குறை இராதாவை வாட்டத்தான் செய்தது. விரதங்கள் எத்தனை? கோயில் நேர்த்திக் கடன்கள் எத்தனை? — ம்! அவள் பழுக்காத பூவாகவே இருந்தாள்.

'என் பேரப்பிள்ளையைத் தூக்கினால் தான் உயிர் மகிழ்வோடு போகும்' என இராதாவின் அன்னை கூறிய வார்த்தைகள்;—அயலவர்கள் குசுகுசுவென எதைப் பேசியிருக்க முடியும்!

'இராதா ஒரு மலடி — இந்த வார்த்தைகள் அவளை வாளாகி வெட்டிச் சித்திரவதை செய்தன, செய்கின்றன—

கனகராஜன் மிக நல்லவன், ஒழுக்கமுள்ள கணவன், ஆனால்......!

## 'புதுமைலோலன்'

முகையவிழாப் புஷ்பத்தை, உரியபடி இதழ் பிரித்துத் தேன்குடிக்கும் வண்டாக அவனில்லை. அவன் உருவைப் பார்ப்பவர்கள் யாருமே கூறமாட்டார்கள்—அப்படியானால் நபுஞ்சகமா?

கனகராஜனுக்குத் தெரியும், இராதாவின் ஆசையும் பாசமும், ஓர் பிள்ளைக்கனியமுதுக்காக ஏங்கும் ஏக்கத்தை—அவன் காணாத டாக்டர்களில்லை, படியாத நூல்களில்லை......எனினும், அவனை ஆண்மையாளனாக்க எதனாலும் முடியவில்லையே!

※ ※ ※ ※

பால் சம்பந்தமான இயற்கைக் கோளாறுகளை நீக்கும் ஒரு டக்டரின் பெயரைக் கேள்விப்பட்ட கனகராஜன் அவரை நாடிப்போனான். அவர் பார்த்தார், பரிசோதித்தார்.

"ஒரு சிறு சத்திர சிகிச்சை தேவை. அதற்கு முன்பு சில நாட்களுக்கு மருந்தேற்றி வரவேண்டும். இங்கேயே தங்கவேண்டும்" என டக்டர் கூறினார். அது ஒரு பிரத்தியேக ஆஸ்பத்திரி. உதவிக்காக இராதாவையும் அழைத்து வந்து ஆஸ்பத்திரியில் ஓர் அறையில் கனகராஜன் சேர்ந்தான்.

இராதா முகையவிழாமலர். மணம் முடித்த கன்னி. பார்ப்பவர் திரும்பிப் பார்க்கச் செய்யும் அழகி — டக்டர் இளைஞன், மணம் முடியாதவன்......!

"டக்டர், எங்கள் கனவு நனவாகுமா" என்றாள் இராதா.

"கட்டாயமாக" என்றார் டக்டர். அப்போது ஊசிமூலம் மருந்தேற்றியதால் கனகராஜன் மயக்கமடைந்து கிடந்தான். அவ்வூசி மருந்து ஒரு மணித்தியாலம் வரை அப்படியிருக்கச் செய்யும். தனியறை. கனகராஜன் மயக்கநிலை. இராதாவோ கடைசி நம்பிக்கையுடன் டக்டரையே தெய்வமாக எண்ணியுள்ள நேரம்......!

இரண்டு நாட்கள் ஓடின.

ஊசி மருந்தேற்றிக் கனகராஜன் மயங்கிய பிறகு,—

"இராதா! உன்னையும் பரிசோதித்துப் பார்ப்பது நல்லது" டக்டர் கூறினார். அவர் கரம் நடுங்கியது.

இராதா டக்டர் தானே என......... என்றுமே, வாழ்விலே காணாத உணர்ச்சி வெடிப்பு, வெறி......இராதாவால் தடுக்க முடியவில்லை.

ஒன்று, இரண்டு, மூன்று......ஒன்பது நாட்கள் கடந்து விட்டன. சத்திர சிகிச்சையும் முடிந்து விட்டது. கனகராஜன் ஆண்மையாளனானான்!

"இன்னும் ஒரு மாதத்துக்கு, இராதாவை நெருங்குவது கூடாது" என்பது டக்டரின் கட்டளை.

அந்த மாதமும் ஓடிவிட்டது. டக்டர் இப்போது குடும்ப நண்பன்—

இராதாவின் முகத்தில் ஏக்கமில்லை. கனகராஜன் வாழத்தெரிந்த கணவனாகி விட்டானல்லவா?

காலம் ஓடியது.

அதோ கையுயர்த்தி, காலசைத்து தளர்நடை நடந்து வரும் பேசும் பொற்சித்திரம்—அச்சித்திரத்தை வரைந்த டக்டர்; கனகராஜன் தந்தையுறவு கொண்டாட விட்டுவிட்டார்.

இரண்டு ஆண்டுகள் ஓடின. திரும்பவும் இராதா கருவுற்றாள். இப்போது கனகராஜன் நல்ல கணவனாய் விட்டானே!

ஆமாம்! கனகராஜனின் முதற் குழந்தை பிறந்தது —

சத்திர சிகிச்சையாலும் பலனிருக்குமோ இருக்காதோ என்றெண்ணிய இராதாவுக்குப் பலன் உண்டு என்பதையுணர்ந்தாள். காதல், இதயத்தன்பு, அவளை வாட்டியது. முதற் குழந்தையைக் கனகராஜன் தூக்கி வைத்துச் செல்லமாக விளையாடும் போதெல்லாம்...... இராதாவின் நெஞ்சு வேதனையால் வெடித்தது. "என்ன கொடுமை இது" என ஏங்கினாள். இந்த ஏக்கம் அவளை அணு அணுவாக வாட்டி நீங்காத படுக்கையில் போட்டது.

அவளுடைய 'மலடி' என்ற பெயரை மாற்றி மகிழ்வு தரவேண்டிய முதற் குழந்தை—

பெற்றவளின் உள்ளத்தில் இனிக்க வேண்டிய பிள்ளைக்கனியமுது—

இனிக்கவேண்டிய அந்தக் கனி, இன்று அவளுக்குக் கசக்கிறது.

அமுதாக இருக்க வேண்டியது நஞ்சாகி, அவளை நாசம் செய்கிறது;

ஆம், குடிப்பதற்குக் குழாய் மூலம் வரவேண்டிய தண்ணீர்—

தண்ணீராகத்தான் வந்தது;

ஆனால், குழாய் வழி வராமல், வழி தவறிச் சாக்கடை வழியே வந்து விட்டதே!

[உண்மை போலிருக்கும்; ஆனால் கற்பனை]

# சிங்களத்தீவில் சினிமாவின் வளர்ச்சி!

படம் பார்ப்பதில் சிங்கள மக்கள் அதிகம் ஆர்வம் காட்டி வருபவர்கள். தென்னக நடிகர்களில் அதிக அபிமானம் வைத்திருப்பவர்கள் சிங்கள மக்கள். இருந்தும் அவர்களது மொழியில் (சிங்களத்தில்) படங்கள் வெளிவரத் தொடங்கி இன்று பதினைந்து வருடங்கள்தானுகிறது.

1947 ம் வருடத்கில் 'கடவன பொருந்துவ' என்ற சிங்களப்படம் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 75 சிங்களப்படங்கள் வெளிவந்துவிட்டன.

இந்த 75 படங்களில் சுமார் 42 இந்தியாவில் தயாரிக்கப்பட்டன. 23 படங்கள் இலங்கையிலேயே தயாரிக்கப்பட்டவை, மிகுதி சிங்கள மொழியில் 'டப்' செய்யப்பட்ட தமிழ், இந்திப்படங்கள்

இந்த 75 சிங்களப் படங்களில் 'ரேகாவ' பொடிபுத்தா சந்தேசயா, குருலுபெத்த, ஆகிய படங்கள் பெருவாரியான ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றவை. இவைகள் சினிமாப்படவிழாவில் காட்டப்பட்டதோடு 'ரேகாவ' என்ற படம் ரஷ்ய மொழியிலும் வேறு சில மொழிகளிலும் 'டப்' செய்யப்பட்டு அந்தந்த ஊர்களில் காட்டப்பட்டன.

மூன்று சிங்களப் படங்களைத் தயாரித்து வெற்றிகண்ட 'சிலோன் என்டர்டெயின்மென்ட் ஸ்தாபனத்தார் இப்பொழுது நாலாவது படமொன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறுர்கள். முன்னைய மூன்று படங்களும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை ஆனல் இந்த நாலாவது படம் இலங்கையில் தயாரிக்கப்படும். இப்படத்தை திரு. ப. நீலகண்டன் டைரக் செய்வார்.

பெயரிடப்படாத இந்தப் படத்துக்கு மேற்படி படத்தயாரிப்பாளர் ஜனுப் ஜபீர் ஏ. காதர் திரு. நீலகண்டனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுர்.

சிங்களப்படங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் தடைவிதித்திருப்பது யாவரும் அறிந்ததே.



குமாரி அம்பிகை நடராஜாவின் பரதநாட்டியம், தமிழ்பல்கலைக்கழக இயக்கத்தின் ஆதரவில், யாழ்–நகரமண்டபத்தில் 4–5–62 மாலை நடைபெற விருக்கிறது.

குமாரி அம்பிகை சென்னை, அடையாறிலுள்ள கலாக்ஷேத்திரத்தைச் சேர்ந்தவர்.

திருமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களால் நடாத்தப்பட்டுவரும் கலாக்ஷேத்திரம் நாட்டியக்கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பணியைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்.

அடையாறிலேயே பிறந்த குமாரி அம்பிகை நடராஜா தமது ஐந்தாவது வயதிலேயே நடனக் கலையைப்பயில ஆரம்பித்துவிட்டார். இப்பொழுது இவருக்குப் பதினெட்டுவயதாகிறது.

நாட்டியத்தில் பட்டம் பெற்ற இவர் கலாக்ஷேத்திரத்தால் நடத்தப்பட்ட நடனங்களிலெல்லாம் பங்குபற்றி அகில இந்தியாவிலும் பெயரும்புகழும்பெற்றவர். இவர் இப்பொழுது கலாக்ஷேத்திரத்தில் கடமையாற்றிவருகிறுர்.

கலாக்ஷேத்திர சங்கீதக்குழுவினர் இவரது நடனத்துக்குப் பின்னணி இசைக்க இந்தியாவிலிருந்து வருகிறுர்கள்.

# 61-ம் ஆண்டு சிறந்த படம்! பாவமன்னிப்புக்கு இரண்டாவது பரிசு!

இந்திய ஜனுதியால் வழங்கப்படும் தங்கப்பதக்கம் 'பாகிரிகிவேடிரா'' என்ற வங்காளப்படத்துக்கு வழங்கப்பட்டது,

அரசாங்கப்பரிசளிக்கும் மத்திய சபை, மேற்படிபடத்தை 1961-ம் வருடத்துக்குரிய சிறந்த படம் எனத்தெரிவு செய்தது. இப்படத்தை வெளியிட்டவருக்கு 20ஆயிரம்ரூபாவும் டைரக்டருக்கு ஐயாயிர ரூபாவும் மேற்படி சபை வழங்கும்.

'பாவமன்னிப்பு' என்ற படம் இரண்டாவது இடத்தைப்பெறுகிறது. படத்தை வெளியிட்டவரும், டைரக்டரும் /முறையே பத்தாயிர ரூபாவும், 2–500 ரூபாவும் பெறுகிறுர்கள்,

'பரபாஞ்ச்' என்றமராட்டியப்படம் மூன்ருவது இடத்தைப்பெறுகிறது:

இருபத்தேழு சினிமாப்படங்களையும், ஐந்து சிறுவர்களுக்கான படங்களையும், ஏழுசெய்திப்படங்களையும், ஆறு கல்வி போதிக்கும் படங்களையும், மத்தியசபை பரிசிலனைசெய்தது. இப்படங்கள் அனைத்தும் 77 மணி நேரம் ஓடின.

மார்ச் 19-ம் திகதியிலிருந்து ஏப்ரல் 2–ம்திகதிவரை நடைபெற்ற இந்த தேர்வின் மத்திய குழுத் தலைவராக திரு. ஆர். ஆர். திவாகர் கடமையாற்றினுர்.

## வசனகர்த்தாவுக்கு மூன்றரை லட்சம்

மே நாட்டின் பிரபல நாவலாசிரியரான சாள்ஸ் டிக்கன்ஸ் எழுதிய பல நாவல்கள் திரைப்படமாக தயாரிக்கப்பட்டு வெற்றி யீட்டியுள்ளன. அவர் எழுதிய ''டேல் ஆப் டூ ஸிட்டீஸ்" என்ற நாவல் படமாக்கப் பட்ட பொழுது, படத்தயாரிப்பாளர்கள் பலகோடி ரூபாய் சம்பாதித்தனர்!

டிக்கன்ஸ் எழுதிய மற்ரெரு நவலான 'பிளீக் ஹவுஸ்' என்ற நாவல் ஏராளமான பொருட் செலவில் திரைப்படமாகத் தயாரிக்கப்பட விருக்கிறது! இந்தக்கதைக்கு வசனம் எழுதப் போகிறவர் யார் தெரியுமா? பிரபல ஆங்கிலத் துப்பறியும் நாவல் ஆசிரியரான அமத்தா கிறிஸ்டிதான்! சில ஆண்டுகளுக்கு முன்னர் அமத்தா கிறிஸ்டி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது வாசகர்கள் அறிந்ததே! டிக்கன்ஸின் கதைக்கு வசனம் எழுதுவதற்காக அவர் மூன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் வாங்க விருக்கிறுராம்!

## அண்ணு கதை, வசனம் எழுதுகிருர்!

அறிஞர் அண்ணு கதைவசனம் எழுதிய 'எதையும் தாங்கும் இதயம்' வெளி வந்துள்ளது.

பாலன் பிக்சர்ஸார் தயாரிக்க இருக்கும் ஒரு படத்துக்கு அறிஞர் அண்ணுவே கதை வசனம் எழுதுகிறுர். 'தென்றல் திரை'ஆசிரியர் திரு. கே. ஆர். பாலன் இப்படத்தைத் தயாரிக்கிறுர்.

கண்ணதாசன் பாடல்கள் எழுதுகிறுர்.

## இந்தியாவின் 'கிளாக்கேபிள்'

சிவாஜிகணேசன் நியூயோர்க்கில் இறங்கியதும் அங்குள்ள நிருபர்கள் 'இந்தியாவின் கிளாக்கேபிள், என்று சிவாஜியை வர்ணித்தார்கள்.

அமெரிக்காவின், தியேட்டர்களைப்பற்றி அறிவதோடு, சினிமாத்தொழில், டெலிவிஷன் ஆகிய வற்றின் வளர்ச்சியைப்பற்றியும் தெரிந்துகொள்வதே தமதுஅமெரிக்க விஜயத்தின் நோக்கம் என்று சிவாஜி நிருபர்களிடம் கூறினுர்.

## சிவாஜியின் மனைவி ஹிந்தி கற்கிருர்!

சிவாஜிச்கு ஓரளவு ஹிந்தி பேசத்தெரியும். ஆனல் எழுதவோ வாசிக்கவோ மூடியாது. ஆனல் சிவாஜியின் மனைவி துரிதமாக ஹிந்தி கற்றுக் கொண்டு வருகிருர். இன்னும் சில நாட்களில் இவர் சிவாஜியையோ மிஞ்சிவிடக்கூடும்.



## ஜெமினி சரோஜாதேவி ஜோடி

முக்தா பிலிம்ஸாரின் பெயரிடாத படத்தில் ஜெமினி — சரோஜாதேவி பிரதம பாகத்தில் நடிப்பார்கள் இசை அமைப்பை திரு: கே. வி. மகாதேவன் மேற்கொள்வார். திரு. வி. ஸ்ரீநிவாசன் இப்படத்தை டைரக்ட் செய்து வெளியிடுவார்.

# சுவையான செய்திகள்

## ராட்சதத் தொலைநோக்கி

உலகிலேயே மிகப்பெரிய தொலைநோக்கி, "பாலோ மார்வான்" ஆராய்ச்சி நிலையத்திலுள்ள தொலைநோக்கியே. இதன் குறுக்களவு 200 அங்குலம். இதன் மூலம் 200 கோடிமுதல் 300 கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள விண்மீன்களையும்காணலாம். ரேடியோ தொலை நோக்கிகள் விருத்தி செய்யப்பட்டபின், இதைக் காட்டிலும் பெரியது, வேறொன்று செய்யவேண்டிய அவசியம் இருக்காது என்றே கருதப்பட்டது. இந்தரேடியோ தொலை நோக்கிகளில்கண்ணாடி எதுவும் இல்லையாகையால் இவற்றைச்செய்வதில் அதிகச் செலவு இல்லை.

இப்பொழுது ஒரு புதிய சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது 'எலெக்ட்ரான்கண்' என்று கருதப்படுகிறது. உந்தக் 'கண்'ணைப் பாலோமார் தொலைநோக்கியில்பொருத்திவிட்டால், இதன் மூலம் இன்னும் அதிகத் தொலைவிலுள்ள விண்மீன்களையும் நோக்கமுடியுமென்று கருதப்படுகிறது. இரண்டாயிர அங்குலம்குறுக்களவுள்ள தொலைநோக்கியில் காண்பனவற்றை யெல்லாம் இதே தொலை நோக்கியைக் கொண்டே காணமுடியுமாம். பாலோமார் தொலைநோக்கியில் விழுகின்ற ஒளியின்பிரகாசத்தை இந்தச்சாதனம் பத்தாயிரம்முதல் இருபதாயிரம் மடங்குபெருக்குகிறது. இப்பொழுதிருக்கின்ற தொலைநோக்கியில் காணமுடிகின்ற வானவெளி இடத்தைப் போல் 27 மடங்கு இடத்தில் உள்ளனவற்றையெல்லாம் இதன்மூலம் காணமுடியும். இப்பொழுது இரண்டாயிரம் கோடி முதல் மூவாயிரம் கோடி ஒளியாட்டுகள் தொலைவிலுள்ள விண்மீன்களை படம் பிடிப்பதை விட, இனி, ஆறுயிரம் கோடிமுதல் எண்பதாயிரம் கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள விண்மீன்களையும் படம் பிடிக்க முடியும். இதன்மூலம் இந்த அண்டத்திற்கு எல்லை இருக்கின்றதா இல்லையா என்பதையே காண முடியும் என்று நம்பப்படுகின்றது.

இந்தக்கருவி இப்பொழுது 'வெஸ்டிங்ஹௌஸ்' ஆராய்ச்சி நிலையத்தில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. முதன் முதலில் இந்தக்கருவியைச் சிறிய தொலை நோக்கிகளில் இணைத்து உலகெங்கும்நடைபெறுகின்ற சர்வதேச நிலத்தத்துவக் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்துவார்கள்.

## மத்தியதரைக் கடல் தோன்றியதேன்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் துருவப்பகுதிகளிலுள்ள பனிமலைகள் அதிகமாக உருகியதால் கடல்களின் மட்டம் 300 அடி உயர்ந்தது. அப்போது செழிப்பான பள்ளத்தாக்கு ஒன்றில் அத்திலாந்திச்சமுத்திரத்தின் நீர் நிரம்பியதன் விளைவாக மத்திய தரைக்கடல் தோன்றியதாம்.

## பனியால் உலகை போர்க்கலாம்

கிரீன்லாந்தை மூடியுள்ள பனியை மட்டும் கொண்டு உலகஉருண்டைக்கே பதினேழுஅடி பருமனுள்ள போர்வை போர்த்துவிடலாம்.

இது உருகினுல் கடல்களின் மட்டம் இருபத்துநான்கு அடிஉயர்ந்துவிடும்.

## ஆபாச உடைக்காரிக்கு அப்பிள்

ஏசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதற்குமுன், அவரது பன்னிரண்டு சீடர்களுள் ஒருவரான அர்ச். இராயப்பரிடம் கத்தோலிக்க திருச்சபையை ஒப்புவித்தார். இராயப்பரேமுதலாவது பாப்பாண்டவர். அவரைத்தொடர்ந்து பல பாப்பாண்டவர்கள் திருச்சபையை ஆட்சி செய்துவத்திருக்கின்றனர்.

பாப்பாண்டவர் வசிக்கும் அரண்மனை ரோமாபுரியிலுள்ள வத்திக்கான் நகரத்தில் இருக்கின்றது. இன்று உலகத்திலேயே மிகப் பிரமாண்ட அரண்மனைவத்திக்கான் அரண்மனைதான்! இந்த அரண்மனையில் இப்பொழுது திருச்சபையை ஆண்டுவரும் 23-ம் ஜோன் பாப்பாண்டவர் வசித்துவருகிறார்.

இவர் முன்னர் இருந்த பாப்பாண்டவரின் பிரதிநிதியாகப் பாரிஸ் நகரில் இருந்தபொழுது ஒருநாள் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது.

பாரிஸில் ஒரு பெரிய விருந்து நடைபெற்றது. நகரின் பிரபலஸ்தர்கள் பலர் அந்த விருந்து வைபவத்தில் கலந்து கொண்டிருந்தனர். ஜோனும் (அப்பொழுது இவர் பாப்பாண்டவர் அல்ல) அந்த விருந்தில் கலந்து கொள்ள வந்திருந்தார்.

விருந்து ஆரம்பமாகியது. ஒரு பெண் அலங்கோலமான உடையணிந்து கொண்டு விருந்துக்கு வந்திருப்பதைஜோன் கவனித்தார். தன் கையில் ஒரு அப்பிள்பழத்தை எடுத்து அதை அந்தப் பெண்ணிடம் கொடுக்குமாறு பரிசாரகர் ஒருவரிடம் கொடுத்து அனுப்பினர். அந்தப்பெண் ஆச்சரியப்பட்டுப்போய், திரும்பிப் பார்த்தாள். உடனே ஜோன் அவளைப்பார்த்துப் பின்வருமாறு கூறினர்.

"ஏவாள் விலக்கப்பட்ட கனியைசாப்பிட்டபிறகுதான், தான் நிர்வாணமாக இருப்பதை உணர்ந்தாள்!"

அவர் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட அந்தப்பெண், விருந்து மண்டபத்தைவிட்டு வெளியே சென்றுதான் அணிந்திருந்த ஆபாச உடையை மாற்றிக் கொண்டு வந்து மீண்டும் விருந்து வைபவத்தில் கலந்து கொண்டாள்!

## அரசு குடும்பக் காரியதரிசி

வின்ஸர் கோமகனும், கோமகளும் சமீபத்தில் லண்டன் வந்தபோது அவர் தனது அந்தரங்கக்காரியதரிசியாக லெப்டினென்ட் கமாண்டர் சார்ளிஸ் தோமஸ் என்பவரை நியமித்தார்.

இவரது காரியாலயம் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்த போதிலும் கருமங்கள் அனைத்தும் பாரிஸிலேயே ஆற்றப்படுகிறது.

அரசகுடும்பத்தினருக்கு அந்தரங்கக்காரியதரிசியாயிருப்பது மிகவும் சிரமமான காரியம்?

5ம் ஜோச் மன்னரின் அந்தரங்கக் காரியதரிசியாயிருந்த ஸ்டாம்போடாம் பிரபு, மரணமடைவதற்கு முன் மன்னரிடம் சென்று தனது வயோதிபம் காரணமாக ஓய்வுபெறப் போவதாகக் கூறினராம்.

"இல்லை, உங்களை விட்டு விட்டு என்னுல் ஒன்றுமே செய்யமுடியாது" என்று கூறி ஓய்வு தர மறுத்துவிட்டார் மன்னர். ஸ்டாம்போடாம் பிரபு சாகும் வரை அதிகாலையில் எழுந்து கடமையாற்ற ஆரபித்து விடுவாராம்.

விக்டோரியா ராணியின் அந்தரங்கக் காரியதரிசியாயிருந்த சேர் ஹென்றி பொன்சன்பி, அரண்மனைக்காரியாலயத்தில் காலை எட்டுமணிக்கு வந்து உட்கார்ந்தால் அப்புறம் பேசவேண்டியதே இல்லையாம். அனேகமாக பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தினசரி அவர் கடமையாற்ற வேண்டியிருக்குமாம்.

## உண்மையை கண்டுபிடிக்க இயந்திரம்!

"யாரடா, இந்தப் பட்சணங்களையெல்லாம் சாப்பிட்டது?" என்று அம்மா கேட்பாள்.

"சத்தியமாக நான் கண்ணுல் கூடக் காணவில்லை" என்பான் சிறுவன்.

இத்தகைய சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் குடும்பங்களில் நிகழ்வதுசர்வசாதாரணம். குழந்தைகள் பெற்ருேருக்குப்பயந்தோ, துடுக்கு தனத்தாலோ பொய்கூறுகிருர்கள், இவர்கள் பொய் பேசுகிருர்களா, உண்மைபேசுகிருர்களா என்பதைக்கண்டுபிடிப்பது எப்படி?

அமெரிக்காவிலுள்ள பெற்ருேர்கள், தமது பிள்ளைகள் பொய்கூறுகிருர்களா? என்பதைக் கண்டுபிடிக்க ஒரு புது வழியைக் கையாளுகிருர்கள்.

ஒருசிறிய இயந்திரம் இங்குள்ள பொம்மைக்கடைகளில் விற்கப்படுகிறது. இந்த இயந்திரத்தில்ஒருசிறியஊசிபொருத்தப்பட்டிருக்கும். பொய்கூறியதாக சந்தேகிக்கப்படும் சிறுவனின் கைவிரலில், இயந்திரத்திலுள்ள ஊசிமுனை பதியக் கூடியதாகப் பெற்ருர்பொருத்துகிருர்கள், சிறுவன் உண்மையில் பொய்கூறியிருந்தால் அவனது இரத்தோட்டம் அதிகரிக்கும். வியர்க்கஆரம்பித்துவிடும். அப்பொழுது மேற்படி மெய்ப்பாட்டுணர்ச்சிகள் காரணமாக ஊசி விரலில் குத்திவிடும்.

மெய்ப்பாட்டுணர்ச்சி ஏற்படாவிட்டால் ஊசிகுத்தாது. பொய் பேசவில்லையென்ருல் சிறுவன் பயப்படமாட்டானல்லவா? ஆகவே இரத்தம் வேகமாக ஓடாது, ஊசியும் குத்தாது.

## மின்மினிப் பூச்சியை நாடும் பெண்கள்

நகைகளில் மட்டும்தான் பெண்களுக்கு ஆசை என்பதல்ல. மின்னும் பொருள் எதுவானுலும் அதை எடுத்துச் சூடிக்கொள்ள அவர்கள் விரும்புவார்கள்.

பிரேஸில் நாட்டில் உள்ள பெண்கள் மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துத் தங்கள் கூந்தலில் பதித்துக் கொள்ளுகிருர்கள், இங்குள்ள மின்மினிப் பூச்சிகள் பெரியனவாக இருக்கும். ஒளிவீசும் இந்தப் பூச்சிகள் தமது வனப்பை அதிகரிக்கின்றன என்று அவர்கள் நம்புகிருர்கள்.


சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
வீரிய விர்த்தி மாத்திரை
மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமிதபோகத்தினுலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
லேபனம் மெழுகு
குறிசிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலை பஜார், ஆள்க்கருணை. (P. O.)
(சிலோன்)

'மில்க்வைற் நீல சோப்'
ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.




# இத்தால்... சகலரும் அறிவது!

### இரண்டு மைலுக்குள் இருபது உடைசல்

கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள வெல்லா வெளியிலிருந்து 'மண்டூருக்குச் செல்லும் பாதை நீண்டகாலமாக மோசமான நிலையிலுள்ளது. இரண்டுமைலுக்குள் சுமார் இருபது இடங்களுக்கு மேல் உடைந்து பள்ளமும் திட்டியுமாய் வீதி காட்சியளிக்கிறது. இதனல் பிரயாணிகள் படும் தொல்லை சொல்லிமுடியாது. சம்பந்தப் பட்டவர்கள் இதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

வெல்லாவெளி, எஸ். கோபாலசிங்கம்.

### அறிவுக்குப் பயன்படும் கட்டுரைகள் வேண்டும்.

புதினத்தில் அறிவுக்குப் பயன்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கவும், 'புதினத்' தில் வெளியிடும் கதைகளுக்குப் படம் போட்டாலென்ன? 'புதினம்' புகழ் பரப்ப என் ஆசி.

ஏருவூர், செங்கலடி, எஸ். செல்வநாதன்

### தமிழ்க்கொலை

கொழும்பு மாநகரில்—பாராளுமன்றத்துத் தங்கும் அறையில் உள்ள விளம்பரப் பலகைகளில் பெருமளவுக்கு தமிழ் கொலை செய்யப் பட்டிருக்கிறது.

'செல்லும்' என்பதற்கு 'செல்ழும்' என்றும், 'மூலம்' என்பதற்கு 'முலஞ்' என்றும், 'ஆராச்சி' என்பதற்கு 'ஆறச்சி' என்றும் இன்னும் எத்தனையோ சித்திரவதைகள்!

தமிழ் காக்கப் புறப்பட்ட நமது அங்கத்தவர்கள் இதைப்பற்றி ஒரு வார்த்தை ஆட்சி மன்றத்தில் பேசவில்லையே! ஏன்?

கொழும்பு—2, வி. எஸ். பி. கே.

### இரண்டு நல் முத்துக்கள்

வருடத்தில் மலர்ந்த 'புதினம் மலர்' இதயத்தில் நின்று இன்னும் மணம் பரப்புகிறது. மலரில் இடம் பெற்ற இருகதைகளும், இரண்டு நல் முத்துக்கள். எட்டிப் பிடிக்கமுடியாத அளவுக்குப் புதினத்தின் தரம் உயர்ந்து விட்டது.

திருகோணமலை, செல்வி கே. பத்மா.

### அழகுக்கு அழகுதரும் படைப்பு

மலரின் முன் பக்கப் புதிய அமைப்பு கவர்ச்சியாகவும் குழுமையாகவுமிருக்கிறது. 'மஹாகவி' யின் கவிதை அழகுக்கு அழகு செய்யும் அற்புதப் படைப்பு!

வெள்ளவத்தை, 'வேனில்'

### வாழிய வாழியவே!

பாரோர் பகுத்தறிந்து
வாழ நற் செய்திகளை
சீரோடு வந்தளிக்கும்
புதினமே வாழிய நீ!
நற்றமிழின் பெருமைதனை
நவில்கின்ற பொற்பாவாய்
வெற்றி அரியணையில்
வீற்றிருப்பாய் வாழியவே!
பல் கலைஞர் படைப்புக்கும்
பரிவோடிட மளித்து
நல்லன்பைப் பெற்றுவிட்ட
நல் ஏடே வாழிய நீ!

மாவிட்டபுரம், செல்வி ஆர். விஜயலட்சுமி.

## என்னசேதி?

### மூன்று நாடகங்கள்

சென்ற 11-4-62ல் கரணவாய் தெற்கு விளையாட்டுக் கழக மைதானத்தில் கலாலயத்தினர் அளித்த 'கல்லறைக் காதல்' நாடகமும், விளையாட்டு வீரர்கள் அளித்த 'வாழ் வழிக்கும் தெய்வ'மும், விக்கினேஸ்வராக்கழகம் அளித்த 'சங்கிலியனு'ம் உடுப்பிட்டி கிராமச்சங்கத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

### சம்பத்துக்குக்கடிதம்

திராவிடமுன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி தமிழ் தேசியக்கட்சியை உருவாக்கியிருக்கும்திரு. ஈ. வி. கே. சம்பத்தை மீண்டும் தி. மு. க. வில் சேர்ந்து பணிபுரியும்படி கொக்குவில்மேற்கைச்சேர்ந்த வித்துவான் வ. கந்தையா, திரு. சம்பத்துக்கு இலங்கை திராவிடர் சார்பில் ஒருகடிதம் எழுதியுள்ளார்.

### தமிழரசு முன்னணி தலைவர் தெரிவு.

சென்ற 8-4-62 ல் கிளிநொச்சி அரசினர் பாடசாலை மண்டபத்தில் இலங்கை தமிழ்அரசுக்கட்சிவாலிபமுன்னணிவருடாந்தக் கூட்டம் நடைபெற்றது.



மேற்படி கூட்டத்தில் திரு. எஸ். கே. இலட்சுமனன் முன்னணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாக உரையாற்றக் கூடிய திரு. இலட்சுமணன் கிளிநொச்சி இளைஞர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### எழுத்தாளர் கூட்டம்.

இம்மாதம் 28, 29, ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிக்கும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாடு சம்பந்தமாகப் பேசி ஒரு முடிவுக்குவர யாழ்ப்பாணப் பிரதேச எழுத்தாளர் அனைவரும் 17-4-62 ல் கூடி விவாதித்தார்கள், இக் கூட்டத்தில் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும்வந்திருந்தஎழுத்தாளர்கள்கலந்துகொண்டார்கள்

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

22-4-62 முதல் 28-4-62 வரை

மேடம்: தொழிலில் தொடர்ந்து முன்னேற்றங் காணப்படுகிறது. பொருள் விருத்தியுறுண்டு. இனசனங்களுடன் சிறு விரோதங்கள் உண்டாகலாம். தேக சுகம் பாதிக்கப்படும். ஞாயிறு திங்கள் செவ்வாய் காலையை அவதானமாகக் கழிக்கவும்.

இடபம்: குடும்பத்திலிருந்த சச்சரவுகள் நீங்கிச் சுமுகமான உறவுகள் காணப்படும். தொழிலில் அதிக பிரயாசத்தின் பின் வெற்றிகிட்டும். பிதாவழி பந்துக்களால் சிறு கஷ்டங்கள் ஏற்படலாம். செவ்வாய் பிற்பகலையும் புதன் வியாழன் தினங்களிலும் கஷ்டங்கள் அதிகமாகும்,

மிதுனம்: தொழிலைப்பொறுத்தவரையில் முன்னேற்றம் காணப்படுகிறது எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் உடன் நீங்கிவிடும். மனதில் அமைதி நிலவாது. வியாழன் பிற்பகல் வெள்ளி சனி வாரங்களை அவதானமாகக் கழிக்கவும்,

கடகம்: குடும்பச்சூழ் நிலை சுமுகமாக அமையும், ஸ்திரீகளால் உதவியுண்டு, தொழிலிலும் சிறு முன்னேற்றம் உண்டு. ஆனல் போதிய லாபம் கிட்டாது.

சிங்கம்: எவ்வித எதிர்ப்புகளையும் சமாளித்து உங்கள் விஷயங்களில் வெற்றி காண்பீர்கள். பொருள்விருத்தியுமுண்டு. ஆனல் குடும்பச்சச்சரவுகளும் தேகசுகவீனமும்ஏற்படும்,

கன்னி: இந்த வாரம் தேகநிலை நன்ருக இராது, மனதிலும் அமைதி நிலவாது உங்கள் சுதந்திரம் பாதிக்கப்படும். அன்னியர் மூலமாக மட்டும் சிறு உதவிகள் உண்டு.

துலாம்: வாகனுதிகளாற் செலவுகள் ஏற்படும், நண்பர்களுடனும் உறவினர்களுடனும் வாக்குவாதங்களும் உண்டாகும். ஆனல் எடுத்த கருமங்களில் வெற்றியுண்டு. பொருள் லாபமும் கிட்டும்,

விருச்சிகம்: இந்த வாரமும் குடும்பத்தில் சிறு சச்சரவுகள் காணப்படும் பிரயாசமும் அதிகமாக இருக்கும். எதிர்ப்புகளை மட்டும் சமாளிப்பது சுலபமாகக் காணப்படுகிறது. தேகசுகத்தைப்பேணவும்.

தனுசு: வாக்கு விரோதங்கள் காணப்படுகின்றன; பிறர் விஷயங்களில் தலையிட்டுக் குறைகேட்கவும் நேரிடும். தேகத்தில் உஷ்ணமதிகமாகும். தொழில் ஸ்தானத்தில் சங்கடங்களும் உண்டாகும்.

மகரம்: தொழிலில் சிறு முன்னேற்றம் காணப்படுகிறது. நண்பர்களால் பல உதவி கிட்டும். வாகனுதிகளாலும் லாபம் உண்டு. ஆனல் குடும்பச் சச்சரவுகள் ஏற்படும்.

கும்பம்: தொழிலில் அதிக பிரயாசத்தின் பின் லாபம் கிட்டும். சகோதரராலும் நன்மையுண்டு: ஸ்திரீகள் சகாயமும் சத்துரு ஜயமும் ஏற்படும்.

மீனம்: தேகசுகம் தொடர்ந்துபாதிக்கப்படும். நண்பர்களுடனும் விரோதமுண்டு: ஆனல் அன்னியருதவியுண்டு, முன் முதலீடு செய்தவற்ருலும் லாபம் கிட்டும்.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தவூர் வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

**ஐந்தாம் வகுப்பு**
**'ஸ்கொலஷிப்' பரீட்சைக்கு**
**மிகவும் உதவக் கூடிய பயிற்சி நூல்கள்**

1. வினுப்பத்திரம்—கணிதம் சதம் 60
2. வினுப்பத்திரம்—பாஷை " 60

எழுதியவர்: வே. க. கந்தசாமி

3. வினுப்பத்திரம்—விவேகம் ரூ 1-25

எழுதியவர்: திரு. வே. மு. சபாரத்தினசிங்கம்

**விற்பனையாளர்:**

ஆனந்தா அச்சகம்—புத்தகசாலை
226, காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம்

ஸ்ரீமான் சித்தம்பலம் (6)

வெருட்சி!



### விளம்பரவிநோதம்

ஒரு விட்டுவாசலில் ஒரு விளம்பரப்பலகை தொங்கியது. அதில்—

உடன்பிறந்த பூனைக் குட்டிகள் இலவசம்' என்றிருந்தது.

இரண்டு வாரங்களுக்குப் பின் அதே பலகையில்—

'பூனைக்குட்டிகள் இலவசம் என்றிருந்தது.

ஒரு மாதத்துக்குப்பின்—


'பூனைகள் இலவசம்' என்றிருந்து அடுத்துச் சில மாதங்களுக்குப்பின்—

'பூனைகளும் குட்டிகளும் இலவசம்' என்று அந்தப் பலகையில் எழுதியிருந்தது!

### அவருக்கு 'அடங்கியது'

ஒருவர்: (நண்பரைப் பார்த்து) என்னப்பா, காரை எடுத்துக்கொண்டு நள்ளிரவில் ஓடிவந்திருக்கிருயே, அப்படி என்ன அவசரம்?

நண்பர்: அவசரமில்லை. மனைவி சண்டை போட்டாள். அவளைக் கட்டுப்படுத்த என்னல் முடியவில்லை. என் எண்ணப்படி—என் கட்டுப்பாட்டுக்குப் பணிந்து யாரையாவது—எதையாவது நடக்கும்படி செய்ய வேண்டும்போல் தோன்றியது. உடனே காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன்.





கிழவர்:—டேய், நீ அதிர்ஷ்டக்காரன் தானடா!........ தங்கச் சிலைமாதிரி உனக்கு மனைவி வாய்த்திருக்கிருளே!

வாலிபர்:—(காது கொஞ்சம் மந்தமானவர்) ஆமாம்........ தங்கமும் சிலையும் வேண்டுமென்று அவள் கேட்பாள். நான் வாங்கிக்கொடுப்பேன், அல்லது வாங்காமல் விடுவேன், அதைக் கேட்பதற்கு நீர் யார்?........

கிழவர்:—? ......?......?......

கணவன்:— (வாசிக்கிருர்) என் கற்கண்டே......கட்டாணி முத்தே........தெவிட்டாத தேனமுதே..............

மனைவி:—இது யாருக்கு எழுதின கடிதம்?

கணவன்: — கடிதம் இல்லையடி ..பேசிப் பழகுகிறேன்!

மனைவி:—யாருடன் குலாவுவதற்கு?

கணவன்:— குலாவவா?...... வானொலி நாடகத்தில் நான் காதலனாக நடிக்கிறேன், அதற்காக ஒத்திகை பார்த்தால் ......... நீ ஒண்ணு..........

மனைவி:—?......?......?...?...



## 'தேவன்' யாழ்ப்பாணம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யம்' என்ற மாதசஞ்சிகையில் படித்தேன். வேறெங்கு எப்படியிருந்தாலும் இலங்கையில் மூற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் போர்வை. நல்ல வல்லமை படைத்தவர்களும், உழைப்பில் அசதியடையாதவர்களும், அவர்கள் மத்தியில் இருக்கிருர்கள்...இந்தியாவில் இந்த லேபல் ஒட்டியவர்கள் தாங்கள் மட்டுந்தான் எழுத்தாளர்கள் என்று தம்பட்டமடிக்கும் அளவுக்கு தடிப்புள்ளவர்களாயில்லை. சாதியைப் பற்றி எழுதினல் முற்போக்கு என்றும் சில இளைஞர்கள் கருதுகிருர்கள். ராஜாஜியின் மதுவிலக்குக் கதைகளும், பாரதியின் தேசியப் பாடல்களும், நோக்கத்தோடு எழுதப் படுபவை. தேவையைக் கருதி படைப்பவை அமரத் தன்மை அடையாது, காலத்தால் இறந்துபோகும் என்பதைத் தான் காட்டுகின்றன. உலக சகோதரத்துவம் பேசுகிறவர்கள் எழுத்திலும் கலையிலும் மாத்திரம் வித்தியாசம் பாரட்டுவது சுயநலம் கருதியே. இவ்வியாதி விரைவில் இதர கலைகளையும் தொற்றிக் கொள்ளப் போகிறது.

ஏதாவது சம்பவங்கள்தான் தங்களை எழுதத் தூண்டியதா? அல்லது எழுதவேண்டுமென்பதற்காக எழுதுகிறீர்களா?

'எல்லாம் கற்பனை' என்று கடைசியில் போடுகிறேனே, அதுதான் கற்பனையின் சிகரம். சம்பவங்கள் உணர்ச்சித் தங்திகளில் ஒன்றையோ பலவற்றையோ மீட்டுகின்றன. அதற்கு கை, கால் வைத்து எழுதுகிறேன். எப்போதோ, எங்கோ சந்தித்தவர்களை தாடி, மீசை வைத்து மாறுவேடம் போட்டு நடமாட வைக்கிறேன். எழுதவேண்டும்என்று வலிந்து எழுதினல் அது சோபிக்காது. 'மலர்க்கதைகள்' சில தோல்வியடையக் காரணம் அதுதான். எழுதியாகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் பக்கம் நிரம்பலாம் இலக்கியம் பிறக்காது.

தாங்கள் பல நாடகங்கள் தயாரித்தும், பல நாடகங்களில் நடித்தும், இப்பொழுது நாடகத் துறையைப் பற்றி எந்தக் கவனமும் எடுப்பதில்லையே! ஏன்?

ஒரு நாடகத்துக்கு சுமார் 600 மணி நேர உழைப்பு வேண்டும். அந்த அளவு நேரவசதி எனக்கு இப்போது இல்லை, அடுத்தது பாடுபட்டு ஒரு நாடகத்தை உருவாக்கி ஒரு தடவை மட்டும் மேடையேற்றுவதுடன் நிறுத்துவது வீண் எனப்படுகிறது, கல்லூரிகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒத்திகை வைக்கக் கூடிய கட்டுப்பாடு இல்லை, எழுதிய வசனத்துடன் நிறுத்தி கொள்ளும் நடிகர்களும் குறைவு. பெண் வேஷத்துக்கு பெண்களில்லாமல் இனி நாடகம் தயாரிப்பது வீண்வேலை. இந்திய மேடைகளில் போல ஒளி, ஒலி, தந்திரக் காட்சிகளும் நிறையத்தேவை. நிறையப் பணம் வேண்டும். கலைக்காக உன் செலவில் போக்குவரவும் தேநீரும் சிகரட்டும் என்று ஒத்திகைக்கு நடிகர்களை இடைஞ்சல் பண்ணுவது சரியல்ல. மூன்று நல்ல நாடகங்களுடன் இந்தியாவையும் மலேயாவையும் சுற்றுப் பிரயாணம் பண்ணவேண்டுமென்பது என் நெடுநாளைய ஆசை. 10 நடிகர்கள் 2 நடிகைகள் போதிய பணம்—கிடைத்தால் போதும்.

ஈழத்து எழுத்தாளர்களில் தங்களது மனதைக் கவர்ந்தவர் யார்?

பச்சையாகவும் கொச்சையாகவும் எழுதுகிருர் என்பதற்காகக் கண்டித்தாலும், சில கோணல் பார்வைகள் உண்டு' என்ருலும், குறுக்கு வழிகளைச்சில சமயம் கடைப்பிடிப்பவர் என்று சந்தேகித்தாலும், தனித்தன்மை சுயமுத்திரை என்று ஒன்றுள்ள ஒரேயெருத்தாளர் எஸ். பொன்னுத்துரைதான்.

விமர்சனக் கலைபற்றிய தங்கள் கருத்தென்ன?

விமரிசனக் கலை வளர நிறைய இடமிருக்கிறது. எழுத்தாளனே விமரிசகனுயில்லாமல் தனியாக அத்துறையில் திறமை பெற்றவர்கள் வேண்டும். காய்தல் உவத்தலின்றி வளர்ச்சிக்கேற்ற ஆக்க விமரிசனம் அப்போதுதான் வெளிவரும் 'சகோதர விமரிசனம், செய்யப் புறப்பட்டால் 'என் முதுகைச் சொறி, உன்முதுகைச் சொறிந்துவிடுகிறேன்' தான். வெறும் பட்டியல் தயாரிப்பவர்கள்கூட விமரிசகர்கள் என்று மார்தட்டிக் கொள்கிருர்கள். விமர்சனம் வாசகனுக்கு வளிகாட்டவும் பயன் படவேண்டும். பத்திரிகைகள் மனது வைத்தாலன்றி விமரிசனத்துறை முன்னேருது

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

# அரசாங்கத்தின் நல்லதொரு நடவடிக்கை

அடுத்தவன் வாழாமலிருக்க ஆறுநாள் உபவாசம் இருப்பவனைப் போல் பலதுறைகளில்நடவடிக்கைகளைமேற்கொண்டு வந்த நமது அரசாங்கம் இப்பொழுது ஒரு நல்ல காரியத்தை முன்னெச்சரிக்கையோடுசெய்ய முன்வந்திருக்குறது.

பணக்காரர்களை வஞ்சம் தீர்ப்பதற்காக மோட்டார் போன்ற உல்லாசப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத்தடைவிதித்த அரசாங்கம் சர்க்கரை, புளி, கருவாடு ஆகியவற்றிற்கும் இறக்குமதி தடைவிதித்து சாதாரண மக்களையும் சங்கடத்தில் ஆழ்த்தியது.

வெளிநாடுகளிலிருந்து மீன் இறக்குமதி செய்வதையும் கட்டுப்படுத்துவதென அரசாங்கம் சமீபத்தில் முடிவு செய்தது. நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து மீன் இறக்குமதி செய்வதென்றால் உண்மையில் வெட்கக்கேடான விஷயம்தான்.

இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் மீன் இல்லையா? ஏன் இல்லை; நிறைய இருக்கிறது. ஆனால் மீன் பிடித் தொழிலை நல்ல முறையில் விருத்தி செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை இன்னும் அரசாங்கம் கையாளவில்லை.

கடற்கரை ஓரமாக அமைந்துள்ள நகர்களில் மீனுக்கு ஒன்றும் தட்டுப்பாடு இல்லாவிட்டாலும் ஏனைய பகுதிகளில் நல்ல மீன் கிடைப்பதில்லை. ஐஸ்போட்ட கடல் மீன் கிடைத்தாலும் விலை ஆனை விலை குதிரைவிலையாக இருக்கும். மலைநாட்டுப் பகுதிகளில் பெரும்பாலும் கிடைப்பதெல்லாம் ஆற்றுமீன், குளத்துமீனுகவே இருக்கும்.

இந்த நிலையை மாற்றி அமைக்க இப்பொழுது அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மீன் ஒரே விலையில் கிடைக்கக்கூடியவிதமாக மீன் விநியோக நிலையங்களை அரசாங்கம் நிறுவப்போகிறது. இதற்கான மூலதனத்தை வெளிநாடுகளிலிருந்து பெற அது முயற்சிசெய்யும்; அந்நிய தனிப்பட்ட வர்த்தகர்கள் பங்குமுறையில் முதலீடு செய்ய முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்வதென்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இந்த நிலையங்களைக் கொண்டு நடத்தும்பொறுப்பு ஒரு விஷேகுழுவிடம் ஒப்படைக்கப்படும்.

## அடுத்த இதழில்

'உனக்கும் எனக்கும் தெரிந்தால் போதும்!'

'தாளையடி சபாரத்தினம்' எழுதும் சிறு கதை

○ 'எல்ஸி'யின் பணப்பைத்தியம்! (ஜோ. ஏ. எம். தாஸ்)

○ ஐன்ஸ்டீனும் ஐஸ்கிறீமும்

❋ திரைமறைவுச் செய்திகள்.

○ சுவையான செய்திகள்.

ஏ. கே. எஸ். அன் ச ன் ஸ்

போன்: 519

உங்கள் அபிமானத்திற்கும் அன்பிற்கும் உரிய நகை வியாபாரிகள்

நகை மாளிகை

63, 65, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.



செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ

போன்: 436.

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.